நெல்லை சாதிக் கலவரங்களின் அடிப்படை என்ன?

www.padippakam.com

15 ஜனவரி '96 ◻ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்

## கற்பழிப்பா? மானபங்கமா? நீதிபதிகளின் வக்கிர ஆராய்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கம்

திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிராகத் தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தி வரும் இவ்வியக்கத்தைக் கண்டு எதிரிகள் குலை நடுங்குகின்றனர். தமது கொள்ளையும் ஆதிக்கமும் அக்கிரமங்களும் மக்களிடம் அம்பலமாவதைப் பார்த்து பயபீதி அடைந்துள்ளனர்.

• விருத்தாசலம் நகரின் ஆதிக்க சக்திகளாகவும், திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளாகவும் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அரங்கநாதன் மற்றும் பிரபல தங்கக் கடத்தல்காரனும் ஜெயின் ஜூவல்லரி நகைக் கடை அதிபருமான அகர்சந்த் ஜெயின் ஆகியோருக்கு எதிராக இயக்கத்தை மேற்கொண்டுள்ள புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி கடந்த 28.11.95 அன்று இச்சமூக விரோதிகளை அம்பலப்படுத்தி பொதுக்கூட்டத்தை நடத்தியது. அகர்சந்த் ஜெயின் வீசும் எலும்புத் துண்டுகளுக்கு வாலாட்டும் தி.மு.க. இளைஞர் அணியைச் சேர்ந்த மூர்த்தி என்ற நபர், பொதுக்கூட்டத்தில் அகர்சந்தைப் பற்றி எதுவுமே பேசக் கூடாது என்று பு.மா.இ.மு. அமைப்பாளரை மிரட்டினார். ஆனால் புரட்சிகர அமைப்புகளின் போர்க்குணமிக்க பிரச்சாரத்தைக் கண்டு அரண்டு போயிருந்த அகர்சந்த், தனது மக்கள் விரோதச் செயல்களுக்காக மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்திருந்தான். இக்கடிதம் பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக வெளியிடப்பட்டதும் மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்றனர். ம.க.இ.க. தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றிய இப்பொதுக்கூட்டத்திற்கு 1500-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

• சீர்காழியில் 29.11.95 அன்று வி.வி.மு. சார்பாக பொதுக்கூட்டம் நடைபெற்றது. உள்ளூரில் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளாக உள்ள காண்டிராக்ட் கொள்ளைக்காரன் ராஜா, வட்டிக் கடை கியான்சந்த், சம்பத்ராஜ்; வட்டிக் கடையும் ஆபாசத் திரையரங்கும் நடத்தி வரும் குரங்குசேட், கள்ளச் சாராயத் தரகனான அர்ச்சுன விலாஸ் நடராசன், பிரபல கள்ளக்கடத்தல்காரனாகிய சிதம்பரம் சிரீதர் வாண்டையார், குடவாசல் கொலைகாரனும் சசிகலா கும்பலின் எடுபிடியுமான அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் இராசேந்திரனையும் அம்பலப்படுத்தி இப்பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக்கூட்டத்தினையொட்டி சீர்காழி, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய நகரங்களில் பேருந்துப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

• தர்மபுரி மாவட்டம், பென்னாகரத்தில் 15.11.95 அன்று வி.வி.மு. சார்பில் நடந்த பொதுக்கூட்டம் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. உள்ளூர் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளைப் பெயர் குறிப்பிட்டு கேலிச் சித்திரங்களுடன் சுவரெழுத்து, தட்டிகள் மூலம் அம்பலப்படுத்தியும் தெருமுனைக் கூட்டங்கள், ஆட்டோ மூலம் பிரச்சாரமும் செய்து இவ்வியக்கம் நடத்தப்பட்டது. தோழர் இராசன் தலைமையில், தோழர்கள் வெங்கடேசன், ஆம்பள்ளி முனிராஜ், வி.வி.மு. மாநிலப் பேச்சாளர் சிவகாமு ஆகியோர் சிறப்புரையாற்றிய இப் பொதுக்கூட்டத்திற்கு ஏறத்தாழ 3000-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

• கோவை மற்றும் திருப்பூரில் மக்கள் கலை இலக்கியக் கழகமும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சி நடத்த பல முறை முயற்சித்த போதிலும் போலீசார் தொடர்ந்து அனுமதி மறுத்து வருகின்றனர். போலீசாரின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தி சுவரொட்டி இயக்கத்தினை தோழர்கள் நடத்தி வருகின்றனர்.

• திருச்சி மாவட்டம், துறையூர் வட்டத்திலுள்ள காளியாம்பட்டியில் 18.11.95 அன்று வி.வி.மு. சார்பாக தோழர் பொம்மன் தலைமை தாங்கிய பொதுக்கூட்டத்தில் தோழர் செல்வராசு சிறப்புரை ஆற்றினார். இதற்கு முன்பாக 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மிதிவண்டிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இப்பொதுக்கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிக்கு 500-க்கும் மேற்பட்டோர் திரண்டு ஆதரவளித்தனர்.

• பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பெருவளப்பூரில் 15.11.95 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் வாணி, தோழர் செல்வராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். 16.11.95 அன்று பாடாலூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் தமிழ்மணி, தோழர் செல்வராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இப் பொதுக்கூட்டத்திற்கு மேடை அமைக்கும் பொழுது, அ.தி.மு.க. ரவுடிகள் மூவர் ''கூட்டம் நடத்தினால் மேடைக்குத் தீ வைப்போம்'' என்று மிரட்டினர். பின்னர் கூட்டம் தொடங்கியதும் ''தமிழக முதல்வரைப் பற்றி பேசினால் விபரீதம் ஏற்படும்'' என்று கடிதம் கொடுத்தனர். இந்தச் சலசலப்புகளுக்கு அஞ்சாமல், கூட்டத்தில் எச்சரித்ததும் ரவுடிகள் வாலைச் சுருட்டிக் கொண்டனர்.

கூட்ட முடிவில் சனமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. காரன் ஒருவன் ''தைரியமிருந்தால் இது போன்ற பொதுக் கூட்டத்தை எங்கள் கிராமத்தில் போட்டுப் பார்!'' என்று பகிரங்க சவால் விட்டான். அதைத் தொடர்ந்து சனமங்கலத்தில் 26.11.95 அன்று, பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கிராம மக்களே முன்வந்து ஆதரவளித்து அ.தி.மு.க. ரவுடிகளின் முகத்தில் கரிபூசினர்.

• அரியலூர் வாலாசா நகரத்தில் 22.11.95 அன்று பு.மா.இ.மு. சார்பாக பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. பெருவாரியாகப் பெண்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

• மதுரை மாவட்டத்திலுள்ள போடி நகரில் வி.வி.மு. சார்பாக கடந்த 29.11.95 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப் பொதுக் கூட்டத்திற்கு வி.வி.மு. தோழர் மாசானம் தலைமையேற்றார். தேவாரம் பகுதியைச் சேர்ந்த வி.வி.மு. தோழர் பி. பாக்கியராஜூம், என்.டி.பட்டி, வி.வி.மு. கிளைத் தோழர் சேகரும், பகுதி எம்.எல்.ஏ. பன்னீர் செல்வம் மற்றும் ஹெலிகாப்டரில் கஞ்சா கடத்தி புதுப் பணக்காரனாக வலம் வரும் ரவுடி ராஜாங்கம் - இருவரின் சமூக விரோதச் செயல்களைப் புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்திப் பேசினர். தொ.பி.கு. தோழர். சுப்பிரமணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தின் இறுதியில் வி.வி.மு: கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

• இராமநாதபுரம் சிக்கல் கிராமத்தில் 25.11.95 அன்று பு.மா.இ.மு. சார்பாக பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சியும் நடத்த போலீசின் முன் அனுமதி பெறப்பட்டது. ஆனாலும் பொதுக்கூட்டம் நடைபெற வேண்டிய நாளன்று திடீரென கொடுத்த அனுமதியை மறுத்து விட்டது, போலீசு. பு.மா.இ.மு. தோழர்கள் போலீசிடம் நீண்ட நேரம் விவாதம் செய்தும் பயனற்றுப் போகவே, ''கூட்டம் நடத்த நாங்கள் யாருடைய அனுமதியினையும் பெற வேண்டியதில்லை; கூட்டம் நடந்தே தீரும்'' என உறுதியாகக் கூறிவிட்டனர். தோழர்களைப் பணிய வைக்க முடியாது எனப் புரிந்து கொண்ட போலீசு, பின் மீண்டும் அனுமதி கொடுத்தது. பொதுக்கூட்டத்திற்கு தோழர் கோ. நாகராசன் தலைமையேற்க, வி.வி.மு. தோழர் மோகன் சிறப்பரையாற்றினர். போலீசின் அச்சுறுத்தலையும் மீறி ஐநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கூட்டத்திற்குத் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

• இராமநாதபுரத்தில் 24.11.95 அன்று பு.மா.இ.மு. சார்பில் தோழர் முருகன் தலைமை தாங்கிய பொதுக்கூட்டத்தில், தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். வி.வி.மு. கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சி எழுச்சிகரமாக அமைந்தது. இப்பொதுக்கூட்டத்திற்கு முன்பு பு.மா.இ.மு.வின் சுவரெழுத்துக்களை அழித்த ரவுடிகள், பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் அழிக்க முன்வரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 3-4**

16 டிச.'95 - 15 ஜன. '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


ரசிய, போலந்து தேர்தல் முடிவுகள்:

## இது கம்யூனிசத்தின் வெற்றியா?

அண்மையில் போலந்து அதிபர் தேர்தலிலும், ரசியாவின் நாடாளுமன்றத் தேர்தலிலும் போலிக் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து, இந்நாடுகளில் மீண்டும் கம்யூனிசம் காலூன்றத் தொடங்கி விட்டதாக இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் மாய்மாலம் செய்து வருகிறார்கள். நான்காண்டுகளுக்கு முன்பு ரசியாவில், கம்யூனிசத் தலைவர்களின் சிலைகளை உடைத்து, செங்கொடிகளை எரித்து, சுதந்திரம்-ஜனநாயகம், சந்தைப் பொருளாதாரம் என்ற ஆரவாரத்தோடு ஆட்சிக்கு வந்த அதிபர் யேல்ட்சின், அடுத்த சில மாதங்களிலேயே அம்பலப்பட்டுப்போனார். வேலையின்மை, கதவடைப்பு, ஊதிய முடக்கம், விலையேற்றம், வறுமை, விபச்சாரம், மாஃபியாக்களின் கொட்டம் என ரசியா இதுவரை காணாத பின்னடைவுக்குள்ளாகி, முதலாளித்துவ சீர்திருத்தக் கொள்கைகள் படுதோல்வியடைந்து, நெருக்கடி முற்றியது. இதனால் மக்களிடம் நிலவிய வெறுப்பையும் அதிருப்தியையும் சாதகமாக்கிக் கொண்டு, பழைய போலிக் கம்யூனிசப் பெருச்சாளிகள் தற்போது நாடாளுமன்ற கீழ்சபையில் (டூமா) கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றுள்ளனர். பெரும்பான்மையைப் பெறாவிட்டாலும், மொத்த வாக்காளர்களில் 22% ஆதரவைப் பெற்று ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதேபோல, ரசியாவை அடுத்துள்ள போலந்தில், கம்யூனிச எதிர்ப்பாளர் என்ற ஒரே காரணத்துக்காக ஏகாதிபத்தியங்களால் நோபல் பரிசளித்துக் கொண்டாடப்பட்ட வாலேசா, அண்மையில் நடந்த அதிபர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். கம்யூனிசம்-சோசலிசத்தின் பெயரால், ஏற்கனவே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுள்ள போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது அதிபர் தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

பல்கேரியா, பால்டிக் நாடுகளைத் தொடர்ந்து இப்போது ரசியாவிலும் போலந்திலும் போலிக் கம்யூனிஸ்டுகள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதைக் காட்டி, இந்நாடுகளில் மீண்டும் கம்யூனிசம் காலூன்றத் தொடங்கிவிட்டதாகப் பெருமை கொள்ள முடியாது. ஏனெனில் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள புதிய கும்பலுக்கும் கம்யூனிசம்-சோசலிசத்துக்கும் மருந்துக்குக் கூட சம்பந்தம் கிடையாது. போலந்தில் முன்பு அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிலைநாட்டிய இப்போலிகள், தனியார்மயம், சந்தைப் பொருளாதாரம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு புதுப்பணக்காரர்களாக இப்போது மாறிவிட்டனர். ''மனித முகம் கொண்ட முதலாளித்துவம்'' ''ஜனநாயகமும் சந்தைப் பொருளாதாரமும் கொண்ட ஆட்சி'' என்பதே இவர்களின் தேர்தல் வாக்குறுதியாக உள்ளது. போலந்தின் புதிய 'கம்யூனிஸ்டு' அதிபரின் மனைவியே வீட்டுமனைத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கும் புதுப்பணக்கார கும்பலைச் சேர்ந்தவர்தான். இதனாலேயே மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் இப்புதுப் பணக்கார 'கம்யூனிஸ்டு' ஆட்சியை எதிர்க்கவில்லை; வரவேற்கின்றன.

அதுபோலவே, ரசியாவில் வெற்றி பெற்றுள்ள போலிக் கம்யூனிஸ்டுகளும் முதலாளித்துவத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ''அந்நிய முதலீடுகளை நாங்கள் எதிர்க்க மாட்டோம்; பொருளாதாரக் குளறுபடிகளைச் சரி செய்து ரசியாவை வல்லரசாக மாற்றுவோம்'' என்றுதான் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான கென்னடி ஜுகானாவ் கூறுகிறார். அதேசமயம் ''மக்களிடம் உள்ள கம்யூனிச உணர்வைச் சாதகமாக்கிக் கொண்டு, நாட்டின் மையமான தொழில்களை அரசுடமையாக்குவோம்; தனியாருக்கு விற்பதைத் தடுப்போம்; மீண்டும் சோவியத் ஒன்றியத்தைக் கட்டியமைப்போம்'' என்று சவடால் அடிக்கிறார். இதற்காக தேசியவெறி பாசிஸ்டுகளான ஜிரினோவ்ஸ்கி கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

சோசலிச கூட்டுப் பண்ணைகள் அழிப்பு, தனியுடைமை, முதலாளித்துவ அரசு, மேற்கத்திய கலாச்சார, மூலதன ஆதிக்கம் என்று முன்னாள் போலி சோசலிச நாடுகள் பகிரங்கமாகவே முதலாளித்துவ முறைக்கு மாறிவிட்டன. ஆனாலும் சீனா, கியூபா, வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகளில் சோசலிசம் நீடிப்பதாக நம்பூதிரி கும்பல் நியாயப்படுத்துகிறது. இந்த மாற்றங்களை சோசலிசத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் முன்னேற்றம், சோசலிசத்தின் வேறுபட்ட வடிவம், மண்ணுக்கேற்ற சோசலிச முறை என்று இந்தியப் போலிகள் வெட்கமின்றி ஆதரிக்கின்றனர். தூக்கியெறியப்பட்ட முந்தைய போலி சோசலிச ஆட்சியின் தவறுகள் தொடரக் கூடாது என்று ரசிய போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு உபதேசிக்கின்றனர். வேடிக்கை என்னவென்றால் முன்பு ரசியாவின் பிரஷ்னேவ் கும்பலை இப்போலிகள் விசுவாசமாக ஆதரித்தனர். பின்னர் கோர்பியின் கிளாஸ்நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா எனும் முதலாளித்துவ மீட்சியையும் ஆதரித்தனர். இப்போது ரசிய முதலாளித்துவ ஆட்சி முறையில் நிறுவனமாகிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகளையும் ஆதரிக்கின்றனர். ''மீசை வைத்தால் வீரன்; மீசையை எடுத்தால் ஞானி'' என்று கம்யூனிசம் - சோசலிசத்தின் பெயரால் யார் வெற்றி பெற்றாலும், ஆட்சியமைத்தாலும் அதை ஆதரிப்பதுதான் இந்தியப் போலிகளின் பிழைப்புவாத சித்தாந்தமாக உள்ளது. போலிகளின் இந்தப் பித்தலாட்ட மோசடிகளை புரட்சிகர அணிகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் ஐக்கியப்படுவதன் மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாக்கும் இன்றைய மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# புண்ணுக்குப் புனுகு தடவும் விசாரணைக் கமிஷன்கள்

**பாதிக்கப்பட்டவருக்கு அற்ப நிவாரணம் தருவதுதான் விசாரணைக் கமிஷன்களின் அதிகபட்ச தீர்வாக உள்ளது. குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை இல்லை.**

''வேலியே பயிரை மேய்வது'' போல் போலீசே தமது கொட்டடிகளில் *கற்பழிக்கவும்*, கொலை செய்யவும், வீடு புகுந்து அட்டூழியம் புரியவும் செய்தால் மக்களிடம் நிம்மதி எப்படி இருக்கும்? - போலீசின் கொலை, *கற்பழிப்பு* கிரிமினல் செயல்களைப் பார்த்து விட்டு பலர் இப்படி கேட்பதுண்டு. ஆனால், போலீசு நிறுவனமோ பயிரை மேய்வதற்காகவே பயிற்றுவிக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட வேலி என்பதுதான் உண்மை. குறிப்பாக ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகப் போலீசின் கிரிமினல் செயல்கள் - அத்துமீறல்கள் அதிகரித்துள்ளன. தர்மபுரி-வச்சாத்தி சம்பவம், கோவை-சின்னாம்பதி சம்பவம், முத்தாண்டிக்குப்பம் - வசந்தா கொலை, சிதம்பரம் - அண்ணாமலை நகர் பத்மினி *கற்பழிப்பு* மற்றும் நந்தகோபால் கொலை, செஞ்சியைச் சேர்ந்த இருளர் பெண் விஜயா *கற்பழிப்பு* இராமேஸ்வரம்-இராக்கம்மாள், முருகலட்சுமிக்கு நேர்ந்த கொடுமை என சில உதாரணங்களே இதற்கு முத்தாய்ப்பாக உள்ளன.

இவற்றில் ஒரு சில சம்பவங்களை விசாரிக்க தனியே நீதிபதிகள் கொண்ட கமிஷன்களுக்குத் தமிழக அரசு உத்தரவிட்டது. அண்ணாமலை நகர் சம்பவத்தை பழனியப்பன் கமிஷனும், சின்னாம்பதி சம்பவத்தை பானுமதி கமிஷனும், இராமேஸ்வரம் சம்பவத்தை சௌந்தரபாண்டியன் கமிஷனும் விசாரித்துத் தமது முடிவுகளை முன் வைத்துள்ளன. இவற்றில் போலீசின் குற்றங்களைப் பகுதியளவிற்கோ, அரைகுறையாகவோ ஒத்துக் கொண்டுள்ள கமிஷன்கள், போலீசின் சில அத்துமீறல்களைக் கண்டித்து அவற்றைத் தடுப்பதற்கான சில ஆலோசனைகளையும் முன் வைத்துள்ளன. குற்றமிழைத்த போலீசாரின் மீது 'நடவடிக்கை' எடுக்கவும், மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்கவும், இந்நீதிபதிகள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

சாதாரண திருட்டு சம்பவங்கள், வரப்பு-சொத்து தகராறுகள், குடும்ப சண்டைகள் போன்றவற்றிற்காகக்கூட நீதிமன்றப் படிகட்டுகளில் பல ஆண்டுகளாக ஏறி இறங்கிய அனுபவம் பலருக்கு உண்டு. நிரபராதிகளுக்கு தண்டனை - சிறை, குற்றவாளிகளுக்கு விடுதலை - பிணை என்பதே நீதிதேவதையின் தீர்ப்புகளாக இருப்பதையும், பணமுள்ளவன் - பதவியுள்ளவன் பக்கம் நீதிமன்ற தராசுத் தட்டு சாய்வதையும் மக்கள் நன்கறிந்து வைத்துள்ளனர். ஆனால், நீதிபதிகள் தலைமையிலான தனி விசாரணைக் கமிஷன்கள் மீது மக்கள் பலரிடம் ஒரு வகையான மாயை இன்னும் நிலவுகிறது. ஓட்டுக்கட்சிகளே இத்தகைய மாயையை மக்களிடையே விதைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை போன்ற போலீசு அத்துமீறல்கள் - அட்டூழியங்கள் நடந்த பிறகு ''விசாரணைக் கமிஷன் வை, சி.பி.ஐ. விசாரணை நடத்து'' என்று தவறாமல் எதிர்க்கட்சிகள் ஒத்த குரலில் கூப்பாடு போடுவதைப் பார்க்கலாம். விசாரணைக் கமிஷன்களின் தீர்ப்புகளையும் வரவேற்று பாசுரம் பாடுவதையும் முற்போக்காகச் சித்தரிப்பதையும் பார்க்கலாம். தனித்துவ-உயர்ந்த அதிகாரம் கொண்டதாகச் சித்தரிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து வருகிற இன்றைய நிலையில் ''விசாரணைக் கமிஷன்'' போன்றவைகளை முற்போக்காக - மாற்றாகக் காட்டி இச்சமூக அமைப்பின் மீதான நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்ள ஆளும் வர்க்கக் கும்பல்கள் முயலுகின்றன.

**அபலைப் பெண் பத்மினி மீது அவதூறு வீசியது பழனியப்பன் விசாரணைக் கமிஷன்**



அரசியல்வாதிகளின் ஊழல்கள் - அதிகார முறைகேடுகள், கிரிமினல்களின் அட்டூழியங்கள், சாதி-மதக் கலவரங்கள், துப்பாக்கிச் சூடுகள், விபத்துகள், வரதட்சணை-தேவதாசி ஒழிப்பு முறைகள் முதலான பலவற்றிற்கும் இதுவரை ஆட்சி செய்த மத்திய-மாநில அரசாங்கங்கள் பல விசாரணைக் கமிஷன்களை அமைத்துள்ளன. எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதற்காக, தம் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன்னும் பல அரசியல்-சுயநல காரணங்களுக்காகப் பல கமிஷன்களின் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டும், கிடப்பில் போடப்பட்டும் உள்ளன. இவற்றை விடுத்து விசாரணை முடிவுகள் வந்துள்ள ஒரு சில கமிஷன்களை அதுவும் குறிப்பாகத் தமிழகத்தில் அண்மையில் வெளிவந்துள்ள பழனியப்பன், பானுமதி, சௌந்தரபாண்டியன் தலைமையிலான விசாரணைக் கமிஷன்களைப் பற்றிப் பார்த்தாலே போதும் ஓட்டுக்கட்சிகள் உருவாக்கும் மாயைத்திரை விலகிவிடும்.

இக்கமிஷன்களின் விசாரணைக்கு முன்பாக சம்பந்தப்பட்ட போலீசு நிலைய அதிகாரி முதல் உயரதிகாரிகள் வரையிலான விசாரணைகள் மற்றும் கிராம அதிகாரி, வருவாய்த் துறை அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் என நிர்வாகப் பொறுப்பிலுள்ள பல அதிகாரிகளின் விசாரணைகள் நடந்து முடிந்து விடுகின்றன. குற்றம் நடந்ததற்கான ஆதாரங்களான மருத்துவப் பரிசோதனை, கைரேகைப் பரிசோதனை என அனைத்திற்கும் உத்தரவிட்டு அதன் முடிவுகளை இவர்கள்தான் சேகரித்து வைக்கின்றனர். இந்த ஆதாரங்கள் மற்றும் இந்த அதிகார வர்க்க விசாரணையில் உள்ள தகவல்களோடு, தனிப்பட்ட நபர்கள் - அரசியல் கட்சியினர் - சமூக சேவகர்கள் - உறவினர்கள் எனச் சிலரை நேரில் விசாரிப்பதன் மூலமாகவும் சம்பவம் நடந்த இடங்களுக்குச் சென்று சோதனையிடுவதன் மூலமாகவும் கிடைக்கிற தகவல்களையும் சேர்த்து ஆய்வு நடத்தியே விசாரணைக் கமிஷன்கள் தமது முடிவுகளை முன் வைத்துள்ளன.

கொலை, சித்திரவதை, *கற்பழிப்பு* நடந்ததா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க இக்கமிஷன் நீதிபதிகளும், விஞ்ஞானப்பூர்வமான ஆதாரம் என்ற பெயரில் மருத்துவப் பரிசோதனை போன்ற ஆதாரங்களை முக்கியமாகக் கோருகிறார்கள். இவற்றை ஆதாரமாகக் கொண்டே முடிவெடுக்கிறார்கள். ஆனால், மேற்படி அதிகார வர்க்கக் கும்பல் திரட்டித் தருகிற இத்தகைய ஆதாரங்கள் எந்த லட்சணத்தில் இருக்கின்றன?



படிப்பகம்

www.padippakam.com

பத்மினியை, சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரி உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்று கண்டிக்கிறது பழனியப்பன் கமிஷன். சின்னாம்பதியில் நடந்த கொடுமைகளைப் பற்றி முதலில் பகுதிக்குச் சென்று கண்டறிந்த தொகுதி அ.தி.மு.க., எம்.எல்.ஏ. கே.பி. ராஜூ, மண்டல வளர்ச்சி அதிகாரி சுப்பிரமணியன், மதுக்கரை வட்ட ஆய்வாளரும் போன்டூர் துணைக் கண்காணிப்பாளருமான பெரியசாமி ஆகியோர் விசயத்தை வெளியிடாமல் பலநாள் மறைத்து வைத்ததாகக் குற்றம் சாட்டுகிறது, பானுமதி கமிஷன். போதிய ஆதாரமே இல்லாமல் இராக்கம்மாள், முருகலட்சுமி, நம்பு பிச்சையைக் கைது செய்ததோடு, உரிய நடைமுறைகள் குறிப்பாக மகளிரைக் காவலில் வைப்பது தொடர்பான தனி விதிகள் புறக்கணிக்கப்பட்டன என்றும் சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டனர் என்றும், குற்றஞ்சாட்டப்பட்ட போலீசாரின் ''பாக்கெட் டயரி''யான சான்றாவணம் உரிய நாட்களில் பதிவு செய்யப்படாமலும், பதிவு செய்த வரிகள் அடிக்கப்பட்டும் உள்ளதாகக் குறிப்பிடுகிறது, சௌந்தர்பாண்டியன் கமிஷன்.


தாமே சுட்டிக்காட்டுகிற இத்தகைய ஆதார அழிப்பு அத்துமீறல்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, பாதிக்கப்பட்ட மற்றும் பார்த்த சாட்சிகளின் கூற்றுகளையும், சந்தர்ப்ப - சூழ்நிலைகளையும் பிற இயல்பாக உள்ள சமூகப் பிரச்சினைகளையும் - காரணிகளையும் இரண்டாம் பட்சமாக்கி விட்டு ஆதாரங்கள் இல்லை என்பதை மட்டுமே முக்கியமாக முன்னிறுத்தி தமது அபத்தமான முடிவுகளைத் தெரிவிக்கின்றன, இக்கமிஷன்கள். ''பத்மினி மானபங்கப்படுத்தப்பட்டாலே ஒழிய கற்பழிக்கப்படவில்லை; நந்த கோபால் சித்திரவதை செய்யப்பட்டாரே ஒழிய கொலை செய்யப்படவில்லை; தற்கொலைதான்'' என்று முடிவுக்கு வந்தது பழனியப்பன் கமிஷன். ''இராக்கம்மாள், முருகலட்சுமி சித்திரவதை செய்யப்பட்டதும் மானபங்கப்படுத்தப்பட்டதும் உண்மையே ஒழிய கற்பழிக்கப்பட்டதாகக் கூறுவது உண்மையில்லை'' என்கிறது, சௌந்தரபாண்டியன் கமிஷன். சின்னாம்பதி பெண்கள் *கற்பழிக்கப்பட்டது* உண்மை; ஆனால் குற்றமிழைத்த குறிப்பிட்ட போலீசாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கைவிரிக்கிறது, பானுமதி கமிஷன்.

சித்திரவதை வேறு; கொலை வேறு என்பது போல் மானபங்கம் வேறு; *கற்பழிப்பு*வேறு என்று சித்தரிக்கிறார்கள். இது இக்கேடுகெட்ட நிலப்பிரபுத்துவ - ஆணாதிக்க சமூக சிந்தனை அடிப்படையிலான பிரிவு முறை. 'கற்பு' என்ற ஒரு கற்பனையான அணிகலனைப் பெண்களுக்கு மட்டுமே நெறிமுறையாக்கியதும் அது கணவனைத் தவிர பிற ஆடவருடன் உடலுறவு கொள்வதால் மட்டுமே அழிக்கப்படுவதாகக் கூறுவதும் இக்கேடுகெட்ட சமூகத்தின் மதிப்பீடும் அளவுகோலும் ஆகும். பிற ஆடவர்கள் மட்டுமல்ல கணவனும் பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக ஆடை அவிழ்ப்பது, பாலியல் உறுப்புகளைத் தொடுவது - சித்திரவதை செய்வது, உடலுறவு கொள்வது அனைத்துமே பெண்கள் மீதான பாலியல் பலாத்காரமே. அளவுகளில் வேறுபாடு இருக்கலாமே ஒழிய ஒரே வகைக் குற்றமே. ஆனால் இச்சமூக மதிப்பீட்டிற்கு வசதியாக இந்திய சட்டமும் இருவேறு குற்றங்களாகப் பிரித்து, பலாத்காரமாக உடலுறவு கொள்வது மட்டுமே *கற்பழிப்பு* இதுவே கடுமையான தண்டனைக்குரிய மிகப்பெரிய குற்றம் என்றும் சித்தரிக்கிறது.

''இராக்கம்மாளை நிர்வாணமாக்கி, அவரை மூவரும் லத்தியால் அடித்தனர்; அதன் பின்னர் கால்களை நேராக நீட்டி அவரைத் தரையில் அமருமாறு கூறினர். அவரும் அவ்வாறே செய்தார். ஆறுமுகம் (காவலர் எண். 1792) அவருடைய கால்களின் மீது நின்று கொண்டார். அதே சமயத்தில் தலைமைக் காவலர் நாகசுந்தரம் (எண். 643) ராக்கம்மாளின் இரண்டு கால் பாதங்களிலும் அடித்தார். அவரால் வலியையும், சித்திரவதையையும் தாங்க இயலாததால் அழத் தொடங்கினார். தலைமைக் காவலர் நாகசுந்தரம் அவருடைய மார்பகங்களைக் கசக்கினார். அவருடைய அந்தரங்க உறுப்பில் தன்னுடைய கையை நுழைத்தார்; அதன் பின்னர், அவர் லத்திக் கம்பை அவருடைய அந்தரங்க உறுப்பிலும், நாக்கிலும் நுழைத்தார்''. (எண்-116, பக்கம் 45) என்கிறது, சௌந்தரபாண்டியன் கமிஷன்.

மேலும் கமிஷனின் அறிக்கை, ''கணவருடன் படுக்கையை எவ்வாறு பகிர்ந்து கொள்வார் என்றும், எவ்வாறு அவர் சிறுநீர் கழிப்பார் என்றும் முருகலட்சுமியிடம் கேட்டார் தலைமைக் காவலர் நாகசுந்தரம் அத்துடன் நில்லாது மேற்சொன்னவற்றைச் செய்து காட்டும்படியும் கேட்டார்'' (பக்-46) என்கிறது.

இவ்வளவையும் குறிப்பிடுகிற சௌந்தரபாண்டியன் கமிஷன், முரண்பாடாகக் *கற்பழிப்பு* நடக்கவில்லை என மறுப்பதோடு ''கற்பழிப்புக் குற்றச்சாட்டு முருகலட்சுமியைப் பொறுத்தவரையில், மிகைப்படுத்திக் கூறப்பட்ட ஒன்றாகும் என்று தோன்றுகிறது. கமிஷனின் கருத்துப்படி, பெருமளவுத் தொகையை இழப்பீடாகப் பெற வேண்டுமென்பதற்காக, கமிஷனின் மனதில் இரக்க உணர்வினை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் கூடிய மிகை ஆர்வத்தின் வெளிப்பாடே கற்பழிப்பு என்ற குற்றச்சாட்டாகும்'' என்று கூறி அவதூறும் செய்கிறது.



பத்மினி '*கற்பழிப்புக்* குற்றச்சாட்டுக்கும் இதே பதிலைத்தான் திமிரோடு கூறினார், ஜெயலலிதா. சௌந்தரபாண்டியன் கமிஷனைப் போலவே அனைத்தையும் குறிப்பிட்டுவிட்டு *கற்பழிப்பு* நடக்கவில்லை என மறுக்கின்ற பழனியப்பன் கமிஷன், ஜெயலலிதாவின் திமிரெடுத்த அவதூறு கருத்துக்கு இசைவாகவே சில சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது. தர்மபுரி-வச்சாத்தி சம்பவத்தில் மக்கள் தாமே தமது வீடுகளை இடித்துக்கொண்டு ஆதாய நோக்கில் வனத்துறையினர் மீது குற்றம் சுமத்துவதாக சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரி கூறியதையும் அறிவோம்.

இத்தகைய ஆளும் கும்பலின் - அதிகார வர்க்கத்தின் அவதூறுகளில் திமிர் மட்டுமல்ல இளக்காரமும் சேர்ந்துள்ளது. இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் மீனவரா


படிப்பகம்

www.padippakam.com

# நீதிமன்றங்களைத் தோலுரிக்கும் பன்வாரி தேவி வழக்கு தீர்ப்பு

"இராஜஸ்தான் - பதேரி கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவகி பன்வாரி தேவி, குழந்தைத் திருமணம் ஒன்றைத் தடுத்து நிறுத்தக் காரணமாக இருந்தார் என்பதால் ஐவர் அடங்கிய கும்பலால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டார். இவ்வழக்கு தொடர்பாக அண்மையில் மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, நீதிமன்றங்களின் சுயரூபத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள எடுப்பான உதாரணமாக உள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நடுத்தர வயதுக்காரர்கள். பொதுவாக பலாத்காரம் போன்ற குற்றங்களை வாலிபப் பருவத்தினரே செய்வர் என்று விளக்கமளித்து குற்றவாளிகளை விடுவித்துள்ளது. நீதிமன்றம், மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மேல் சாதிக்காரர்களாக (குஜ்ஜார், பிராமணர்) இருப்பதால் தாழ்த்தப்பட்டவரான பன்வாரி தேவியிடம் அவ்வாறு நடந்து கொண்டதாகக் கூறுவது நம்புவதற்கில்லை என மேல் சாதி விசுவாசத்தைக் காட்டியுள்ளது. "தீண்டாமை", மேல்சாதிக்காரர்களுக்கு இப்படியும் சேவை செய்கிறது!



கவோ, தாழ்த்தப்பட்டவராவோ, மலை சாதியினராகவோ உள்ளனர் என்பதே இளக்காரத்திற்கும் ஏளனத்திற்கும் காரணம். சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கியுள்ள இவர்களுக்காகக் கேள்வி கேட்பதற்கு யார் முன் வருவார் என்ற இறுமாப்பில் - மமதையில் இவர்களை வறுமைக்காக எதையும் செய்யக்கூடிய குற்றப் பரம்பரையினராகவும் சித்தரித்து இழிவுபடுத்துகின்றது இக் கும்பல். உண்மையில் இப்பெண்கள் நிவாரணத் தொகை கருதி மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்று அவதூறு செய்வது எதற்காகத் தெரியுமா? இச்சமூக அமைப்பின் ஓர் அங்கமான போலீசு துறையில் பெரிய குற்றம் ஏதும் நடக்கவில்லை; ஒரு சில சாதாரண குற்றங்களே நடந்துள்ளன என்று சித்தரித்து போலீசின் தில்லுமுல்லுகளை மறைப்பதற்குத்தான்!

மேலும் இந்தக் கமிஷன்கள், குற்றமிழைத்த போலீசாருக்குத் தண்டனை வழங்கக் கோருவதைக் காட்டிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதையே முக்கியத்துவமாகக் கோரி இதையே பிரச்சினைக்குரிய தீர்வாகவும் காட்டுகிற அயோக்கியத்தனத்தையும் செய்கின்றன. ஆட்சியாளர்களும் நிவாரணம் வழங்கியதை மட்டும் பெரிதுபடுத்திக் காட்டிவிட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதைக் கிடப்பில் போட்டு விடுகின்றனர் அல்லது மீண்டும் விசாரணை என்கிற இடியாப்பச் சிக்கலில் கொண்டு போய் நிறுத்துகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தமது வறுமையோடு போராடி, சமூக சேவகர்கள், உறவினர்கள், சில அமைப்புகளின் உதவியோடு செலவு செய்து உண்மையை நிரூபிக்க முயல்வதும் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதும்தான் விசாரணைக் கமிஷன் தீர்ப்புகள் வரும்வரை நடக்கும் நிகழ்வு. இதன் பிறகு அரசு கொடுக்கும் நிவாரணத் தொகையில் "பிக்கல்-புடுங்கல்" போக வந்து சேருகிற பணத்தில், அவர்கள் இதுவரை பட்ட கடனை அடைக்கவாவது உதவுமா என்பது கேள்விக்குறியே. அரசின் அற்ப நிவாரணமே அவர்களின் வாழ்க்கை அவலத்தை முற்றிலும் மாற்றி விடப்போவதில்லை. நிவாரணத்தைக் காட்டிலும் நீதியும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையும், இனி இக்கொடுமை எவருக்கும் நிகழாது என்கிற பாதுகாப்பு - உத்தரவாதமும்தான் முக்கியமானவை. பாதிக்கப்பட்ட பெண்களின் உணர்வுகளை கிளறிப்பாருங்கள்; அதன் ஆழம் புரியும். "எனது மருமகள், மகன் முன்னிலையிலேயே நிர்வாணமாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டேனே" என்ற அவமானத்தால் கூனிக் குறுகி மனநிலை பாதிக்கப்பட்டார், இராக்கம்மாள். "எனது கண் முன்னாலேயே எனது கணவரைக் கொன்றார்களே; என் கணவரின் முன்னாலேயே கற்பழிக்கப்பட்டனே" என்ற உள்ளக் குமுறல் - வேதனை பத்மினியிடம் இன்னும் ஓயவில்லை.

**விசாரணைக் கமிஷன்கள் எல்லாம் அதிகார வர்க்கத்தின் குற்றத்தை விசாரித்து நடவடிக்கை எடுக்க மீண்டும் ஒரு அதிகார வர்க்கத்தின் கைகளில் ஒப்படைப்பதைத்தான் செய்துள்ளன. ஒருவரை ஒருவர் கைகாட்டித் தப்பித்துக் கொள்கிறார்கள்.**

குற்றவாளிகள் மீது போலீசு துறை சார்ந்த விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் ஏற்கனவே எடுத்த நடவடிக்கையைத் (தற்காலிக வேலை நீக்கம், இடம் மாற்றம்) தொடரும்படியுமே இக்கமிஷன்கள் அரசுக்குப் பரிந்துரைக்கின்றன. ஆதாரங்களை மறைத்த வருவாய்த்துறை போன்ற நிர்வாக அதிகாரிகள், அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை கோரப்படவில்லை. போலீசு நிலையங்களில் நடப்பவை பற்றி முறையே சோதிக்காத மேலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரையில்லை. மாறாக, இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்கும் நடவடிக்கைகளில் "மேலதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்" என்பதாகத்தான் நிறைய பட்டியலிடப்படுகின்றன. இப்படி கமிஷன்கள் பட்டியலிடுவதும் "விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ள கருத்துக்களை சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காக மேலும் விரிவாக விசாரணை செய்வதென்று அரசு தீர்மானித்துள்ளது" என ஆட்சியாளர்கள் கூறுவதும் சடங்குத்தனமாகி விட்டது. வோரா கமிஷன், அண்மையில் வெளிவந்த சௌந்தர பாண்டியன் கமிஷன் எல்லாம் செக்கு மாட்டுத் தீர்வை அதாவது அதிகார வர்க்கத்தின் குற்றத்தை விசாரித்து நடவடிக்கை எடுக்க மீண்டும் ஒரு அதிகார வர்க்கத்தின் கைகளில் ஒப்படைப்பதைத்தான் செய்துள்ளன. ஒருவரை ஒருவர் கைகாட்டி எளிதாகத் தப்பித்துக் கொள்கிறார்கள்.

விசாரணைக் கமிஷன்களின் தீர்ப்பு, நிவாரணம், ஆலோசனைகள் எல்லாம் பிரச்சினையைத் தீர்ப்பதில்லை; இவை வெறும் கண் துடைப்பே. இதற்கு மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நீதிமன்றம், மக்கள் முன்னிலையிலேயே விசாரணை, தண்டனை என பீகாரில் நக்சல்பாரிகள் கடைபிடிக்கும் பாதையே சரியானது என்பதை மக்கள் உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை.

• சுப்பு


படிப்பகம்

www.padippakam.com

## தொலைபேசித் துறை

# ஏலம் விட்டு கொள்ளையோ கொள்ளை

''தாராளமயம்'', ''நவீனமயம்'' எனும் பெயரில் தொலைத் தொடர்புத் துறையில் இருந்து வரும் அரசின் ஏகபோக நிலையினை ராவ் கும்பல் மெல்ல மெல்ல கை கழுவி வருகிறது. தனியாரும் பன்னாட்டு நிறுவனங்களும் தொலைபேசித் துறையில் புகுந்து இலாபங்களைச் சுருட்டிச் செல்வதற்காக 94-ம் ஆண்டு பிரதமர் ராவ் அமெரிக்கா கிளம்பிச் செல்லும் முன்பாக, ''தேசிய தொலைத்தொடர்புக் கொள்கையை'' அறிவித்தார். இதனடிப்படையில் ஏற்கனவே ''பேஜிங்'', ''செல்லுலார்'' போன்ற நவீன தொலைத் தொடர்பு வசதிகளைப் பெரு நகரங்களில் செய்து தரும் உரிமை தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டது. இதையடுத்து, கடந்த ஆண்டு (95) சனவரி மாதம் நாடெங்கும் ''தொலைபேசி நிலையங்களை அமைத்து இயக்குவது, பூமிக்கடியில் தொலைபேசி கம்பி வடங்களை அமைப்பது, தொலைபேசி இணைப்புகள் கொடுப்பது'' போன்ற அடிப்படை தொலைத் தொடர்பு வசதியை செய்து கொடுப்பதற்குப் பகிரங்க ஏலப்போட்டி ஒன்றை நடத்தி இத்துறையின் மிக முக்கியமான இப்பிரிவினைத் தனியாருக்குத் தாரை வார்த்துவிட முன் வந்தது, ராவ் கும்பல்.

ரிலையன்ஸ், டாடா, பி.பி.எல். போன்ற உள்நாட்டு தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், யு.எஸ். வெஸ்ட், நினக்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று கூட்டுச் சேர்ந்து கொண்டு ஏலப்போட்டியில் குதித்தன. இவற்றுள் ''ஹிந்துஸ்தான் ஃப்யூச்சரிஸ்டிக் கம்யூனிகேஷன்ஸ் லிட்.'' (HFCL) எனும் நிறுவனம் இஸ்ரேல் மற்றும் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த இரு நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, 85,000 கோடி ரூபாய் ஏலத் தொகையாகக் குறிப்பிட்டு, ஒன்பது தொலைபேசி வட்டங்களை (மாநிலங்களை) குத்தகைக்கு எடுக்க இறங்கியது.

வெறும் 96 கோடி ரூபாயே சொத்து மதிப்பு கொண்ட ஊர்பேர் தெரியாத இந்நிறுவனம் குறிப்பிட்ட ஏலத்தொகையைக் கேட்டு, கொட்டை போட்ட பன்னாட்டு நிறுவனங்கள்கூட மலைத்துப் போயின. ஏல விற்பனை எவ்வித மாற்றமில்லாமல் நடந்திருக்கும்பட்சத்தில், ஹெச்.எஃப்.சி.எல். நிறுவனம் முதல் வருட ஏலத்தொகையைக்கூட கட்ட இயலாது திணறிப் போயிருக்கும்; மேலும், ஏலத்தொகை செலுத்த இயலாத நிலையில், தான் கட்டியிருந்த ஏல முன்பணத் தொகையான 175 கோடி ரூபாயையும் இழந்து போயிருக்கும். ஆனால் தொலைபேசித் துறை அமைச்சர் சுக்ராம், தனது சொந்த மாநிலமான இமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த இந்நிறுவனத்தின் இரட்சகனாக முன் வந்து, ஏல விதிகளில் புதிய மாற்றங்களைச் செய்து, ஹெச்.எஃப்.சி.எல். நிறுவனம் எவ்வித நஷ்டமும் அடையாமல் தடுத்துக் காத்து விட்டார். 1,15,000 கோடி ரூபாய் பெறுமான இந்த ஏல விற்பனை, உள்ளூரில் நடைபெறும் சாராயக் கடை, சந்தைக் கடை ஏலம் போல ஊழலும், முறைகேடுகளும், தில்லுமுல்லுகளும் நிறைந்து நாடெங்கும் நாறிப் போனது.

ஏல விற்பனை முடிய வேண்டிய இறுதி நேரத்தில், நாட்டிலுள்ள 21 தொலைபேசி வட்டங்களையும் அவற்றின் வருவாய் அடிப்படையில் 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாகப் பிரித்து,'' 'ஏ', 'பி' என்ற இரு பிரிவுகளில் இருந்தும் மொத்தம் மூன்று வட்டங்களை மட்டுமே எந்தவொரு நிறுவனமும் ஏலம் எடுக்க முடியும்; மேலும் நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி அம்மூன்று வட்டங்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்'' என்ற இரு புதிய விதிகள் சுக்ராமால் புகுத்தப்பட்டன. இதைச் சாதகமாகக் கொண்டு ஹெச்.எஃப்.சி.எல். நிறுவனம் 'ஏ','பி' பிரிவுகளில், தான் விண்ணப்பித்திருந்த எட்டு வட்டங்களில், ஏலத் தொகை குறைவாகவும், அதே சமயம் நல்ல இலாபம் தரத்தக்கதான டெல்லி, அரியானா, உ.பி.(மேற்கு) என்ற மூன்று வட்டங்களை 25,725 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது.

தற்பொழுது ஹெச்.எஃப்.சி.எல். ஒதுக்கிய பிற தொலைபேசி வட்டங்களை, போட்டி நிறுவனங்கள் ஹெச்.எஃப்.சி.எல். அளவிற்கு ஏலத்தொகை கொடுத்து எடுக்க மறுத்துவிட்டதால், அரசிற்கு கிட்டத்தட்ட 20,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயாக இருந்த காங்கிரசின் ஊழல் - மோசடிகள், பங்கு பத்திர மோசடியில் ஆயிரக்கணக்கான கோடியாக வளர்ந்து, இன்று ராவ்-சுக்ராம் கும்பலின் ஆசியோடு பத்தாயிரம் கோடிகளைத் தாண்டிவிட்டது.



தொலைபேசித்துறை அமைச்சர் சுக்ராம்

தொலைபேசித் துறையைக் கூறு போட்டு தனியாருக்கு ஏலத்தில் விற்றுவிடுவதன் மூலம் அரசுக்கு 15 வருடங்களில் கிடைக்கும் வருமானம் 1,15,000 கோடி ரூபாய். ஏலத்தில் எடுக்கும் தரகு மற்றும் பன்னாட்டு முதலாளிகளுக்கோ, இத்துறை பொன் முட்டையிடும் வாத்து தான். ''இன்னும் பத்தாண்டுகளில் இம்முதலாளிகள் 9,45,000 கோடி ரூபாய் வருமானம் ஈட்டுவார்கள்'' என மதிப்பிடப்படுகிறது. இந்தக் கொள்ளையில் பங்கு கொள்ளும் வாய்ப்பு பறிபோனதால், ஏலத்தில் கலந்து கொண்ட ரிலையன்ஸ், யு.எஸ்.வெஸ்ட் போன்ற போட்டி நிறுவனங்கள் திரைமறைவில் நடந்த இந்த தில்லுமுல்லுகளை இப்பொழுது அம்பலத்திற்குக் கொண்டு வந்து விட்டன.

பாராளுமன்றம் முடமாகி, இம்மோசடி நாடெங்கும் நாறிப் போனதால், உச்ச நீதிமன்றம் அவசரமாக இப்பிரச்சினையில் தலையிட்டு, ''சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ஐந்து வட்டங்களில் மட்டும் ஏல விற்பனையை மறுதீர்ப்பு வரும்வரை நிறுத்தி வைக்குமாறு'' மைய அரசுக்கு ஆணையிட்டுள்ளது. இத்தீர்ப்பைக் காட்டி ''நடந்து முடிந்தது மோசடிக்கு தக்க பரிகாரம் கிடைத்து விட்டதாக''க் கூறி நாடகமாடுகின்றன எதிர்க்கட்சிகள். ஆனால் உச்ச நீதிமன்றமோ எதிர்க்கட்சிகளோ தொலைபேசித் துறையைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் கொள்ளவில்லை.

மாறாக, ''சுக்ராம் பதவி விலக வேண்டும்; கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டி அமைத்து இம்மோசடியை விசாரிக்க வேண்டும்'' என்பவைதான் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள். கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டியின் யோக்கியதையைப் பங்கு பத்திர மோசடிக்குத் தண்ணீர் தெளித்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம். அது மட்டுமல்லாது தேர்தல் வரை வீராப்பு காட்டிவிட்டு, அதன் பின் என்ரான் விவகாரத்தில் பா.ஜ.க. - சிவ சேனா கும்பல் குப்புற விழுந்ததைப் போல, இரகசிய பேரம் நடத்தி எதிர்க்கட்சிகள் சமரசம் செய்து கொள்ளவும், பின்னர் ஏலத்தில் எடுத்த நிறுவனங்களுக்கே தொலைபேசித் துறையைத் தாரை வார்க்கவும் கூட இவை இணங்கிப் போகலாம்!

• ரஹீம்.

www.padippakam.com

# சாதிக் கலவரங்கள் அடிப்படை என்ன?

— நேரடி செய்தி தொகுப்பு

தென் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் ஐந்து மாதங்களுக்கு முன் தொடங்கிய ஊழிக்காற்று இன்னும் அடங்கவில்லை. நெல்லை. சிதம்பரனார், காமராசர் பின்னர் மதுரை எனத் தென் மாவட்டங்களில் பரவிய சாதிக் கலவர நெருப்பு நீறுபூத்ததாகவே உள்ளது.

இக்கட்டுரை அச்சேறுகிற தருணத்தில் டிச.26 அன்று நெல்லை கடம்பூர் அருகே பேருந்துப் பிரயாணிகள் 6 பேர் வெட்டிக் கொல்லப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது.

1982-ல் புளியங்குடி, ஐயாபுரம் கலவரம் இந்து - முஸ்லீம் பெயர் பெற்றாலும், உண்மையில் தேவர் சமூகத்திற்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே நடந்த மோதலாகும், அது. அப்போது 10 தாழ்த்தப்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர். அன்றைக்கு தேவர் சாதி மக்கள் வாழும் கிராமங்களில் பதட்டம் இல்லை; ஊர் முழுவதும் கண் விழிக்கும் அவசியம் இல்லை; பசும்பொன் தேவர் சிலைகளுக்குக் காவல் இல்லை; மொத்தத்தில் தேவர் சாதி மக்களின் வழக்கமான வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏதும் இல்லை.

இன்றைய நிலைமை நேர் எதிராக உள்ளது. காலனிய ஆதிக்கத்தில் பாளையக்காரர்களாகவும், ஊத்துமலை, சேத்துமலை, சிவகிரி, நெல்கட்டும் சேவல், வாசுதேவ நல்லூர், சிங்கம்பட்டி எனப் பல ஊர்களில் ஜமீன்தார்களாகவும் கொடிகட்டிப் பறந்த தேவர் சமூக ஆதிக்கம், இன்று ஆட்டங்கண்டுள்ளது.

சாதி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடும் தாழ்த்தப்பட்ட மக்களது (பள்ளர்கள்) கடந்த ஒரு தலைமுறை வாழ்க்கையானது அவர்களில் கணிசமானவர்களின் சமூகப் பொருளாதாரத்தை ஓரளவுக்கு மாற்றியிருக்கிறது. கடும் இழப்புக்களைச் சந்தித்தபோதும் தொடர்ந்து போராடுவதற்கு ஊக்கமான கருவியாக நிலமும், விவசாயமும், உடலுழைப்பும் உருவாக்கித் தந்த சுய பொருளாதாரக் கட்டமைப்பு காரணமாக உள்ளது.

பொதிகை மலையில் பிறந்து தூத்துக்குடியில் சங்கமிக்கும் தாமிரபரணி - அதன் பாசனத்தின் மூலம் இருபோகம் விளையும் நஞ்சை நிலங்களில் சிறு அளவு தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தம். பெரும்பான்மையினர் குத்தகை - கூலி விவசாயிகளாகவும், சிறுபான்மையினர் சிறு விவசாயிகளாகவும், ஒரு சிலர் பணக்கார விவசாயிகளாகவும் உள்ளனர். இந்நிலைமை ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்றத்தாழ்வாக இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நெல்லை, சிதம்பரனார் மாவட்டங்களின் வடக்கு - வடகிழக்குப் பகுதிகள் மானாவாரி விவசாய பூமியாகும். 20 ஆண்டுகளுக்கு முன்பு கூலிகளாகவும், பின்னர் குத்தகை விவசாயிகளாகவும் இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள், தம் உழைப்பின் காரணமாக மேல்சாதியினரிடமிருந்து நிலங்களையும், வீடுகளையும் சிறிது சிறிதாக வாங்கியிருக்கின்றனர்.

நெல்லை, தென்காசி, சங்கரன் கோவில், இராசபாளையம் மற்றும் சிறு நகரங்களில் பெருமளவு வாழும் தாழ்த்தப்பட்டவர்கள் சிறு விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும், உதிரிப் பாட்டாளிகளாகவும் உள்ளனர்.

சிறு நகரங்களைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உள்ளது. தேவர்கள் பெரும்பான்மையினராக உள்ள கிராமங்களில் சிறுபான்மை தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயக் கூலிகளாகவும், ஆதிக்கத்திற்கு அடங்கி நடப்பவர்களாகவும் உள்ளனர். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையினராக உள்ள கிராமங்களில் சிறு நில உடமைக்காரர்களாகவும், அடக்குமுறையை எதிர்த்துப் போராடுபவர்களாகவும் உள்ளனர்.

> 20 ஆண்டுகாலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் பொருளாதார மாற்றங்கள் நடந்த அளவு சமூக உறவுகளில் மாற்றம் எதுவும் நடந்துவிடவில்லை. ''தாம் அடிமைகளல்ல'' என்று பிரகடனப்படுத்தும் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளின் போராட்டம் அத்தகைய மாற்றத்தைக் கொண்டு வரும்.

**தாழ்த்தப்பட்டவர் மாதிரி கிராமம்:**

**மலைப்பட்டி** - நெல்லை கயத்தாறு அருகே உள்ள கிராமம். பெரும்பான்மை சமூகத்தினராக நாயுடுக்களும், சிறுபான்மையினராகப் பள்ளர்களும் இருக்கின்றனர் - மானாவாரி விவசாயம்.

20 வருடங்களுக்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் ஏதும் இல்லை. அன்றாடம் வேலை கிடைத்தால் சிறிது கம்பங்கூழ் கிடைக்கும். தீண்டாமையின் அனைத்து வடிவங்களும் இருந்தன. பொதுக் கிணறு கிடையாது; ஊர்க்கோவிலைப் பார்க்க முடியாது; நாயுடு வரும்போது வீட்டுத் திண்ணையில் கூட உட்கார முடியாது. நல்லது கெட்டது அனைத்திற்கும் நாயுடுக்களை சார்ந்து வாழ வேண்டிய நிலை.

**இடைக்காலம்** - மழை பெய்யும் போது தீவிரமாகச் சாகுபடி நடைபெறும்; குடும்பம் முழுவதும் உழைப்பில் ஈடுபடும். கடன் வாங்கி ஆடு - மாடு வளர்ப்பதோடு, வறட்சிக் காலங்களில் வெளியூர் வேலைகளுக்கு மாதக் கணக்கில் சென்றுவிடுவது வழக்கம். ''எங்கள் ஊர் இளைஞர்கள் இருப்புப் பாதை போடுவதில் நிபுணர்கள்'' என்கிறார் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவர்.

**இன்று** - சாகுபடி நிலங்கள் 4,000 ஏக்கரில் 1,500 ஏக்கர் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தம். 2 ஏக்கர் முதல் 40 ஏக்கர் வரை ஒரு குடும்பத்திற்கு உண்டு. நிலமில்லாத குடும்பங்கள் பத்துக்கும் குறைவு. நாயுடுகளுக்கு அதிகபட்சம் 150 ஏக்கர் வரை நிலமுண்டு. தீண்டாமை வடிவங்கள் எதுவும் கிடையாது. பொதுக் கிணறு, பொதுக் கோவில், நாயுடுக்களின் வீடுகள் சிலவற்றை தாழ்த்தப்பட்டவர்கள் விலைக்கு வாங்கி அவர்கள் தெருக்களிலேயே குடியிருக்கின்றனர். விவசாய வேலைகள், கருவிகளுக்கு இரு தரப்பினரும் உதவிக் கொள்கின்றனர். கூலிக்கு ஆள் வைத்து விவசாயம் செய்வதால் நாயுடுக்களைப் பொருத்தவரை விவசாயம் என்பது அதிக இலாபகரமானதல்ல. குடும்பமே முசிந்து வேலை செய்வதால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விவசாயம் இலாபகரமானது. கடந்த பத்து வருடங்களில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அரசு வேலை செய்பவர்கள் எனத் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்நிலை மாறி வருகிறது. நாயுடுக்களில் கணிசமானோர் நகரங்களில் தங்கி விட்டனர்.

இப்படி உழைப்பினால் பொருளியல் சுயசார்பு அடைந்தவர்கள், சமூக உறவில் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். தற்போது கொடியன்குளம் சம்பவம் உணர்வுரீதியில் அவர்களைப் பாதித்து எழுச்சியூட்டியிருக்கிறது. ''கொடியன்குளத்திற்குப் போவது என்



படிப்பகம்

www.padippakam.com

பது மெக்கா, மெதினா போன்ற புண்ணி யத் தலங்களுக்குப் போவது மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆகிவிட்டது. தென் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஊர்களில் இருந்தும் அரிசி, பருப்பு, பணம் என்று கொண்டுபோய்க் குவித்து விட்டார்கள்'' என்கிறார் தாழ்த்தப்பட்ட அரசு மருத்துவர் ஒருவர்.

கலவரம் நடக்கும் இடங்களில் எதிர்த்துப் போராடும் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அமைப்பிலும் அணிதிரண்டு போராடவில்லை. தன்னெழுச்சியாகவே போராடுகிறார்கள். பா.ம.க.தான் கலவரத்தைத் தூண்டிவிடுகிறது என்று அனைவரும் தேவர் பேரவைக் குரலில் குற்றம் சாட்டக் காரணம், தாழ்த்தப்பட்டவர்கள் ஓட்டுக்களை இராமதாசு அள்ளிச் சென்று விடுவாரோ என்ற பயம்தான். வட மாவட்டங்களில் வன்னியர்கள் பறையர்களை ஆதிக்கம் செய்வது தொடரும் அதே சமயம் தென் மாவட்டங்களில் அடுத்து வரும் தேர்தலை மனதில் கொண்டே இராமதாசின் தலையீடு இருப்பது உண்மையானாலும், கொடியன்குளம் கிராமத்தில் முதலில் நுழைந்து, போலீசின் அட்டூழியத்தை வெளி உலகு அறிய இராமதாசு எடுத்த முயற்சிகளும் உண்மையே. மேலும் தேவர்களின் ஆதிக்கத்தை வெளிப்படையாகக் கண்டிக்கும் ஒரே அரசியல் கட்சியாக பா.ம.க. இருப்பதை வைத்து இராமதாசின் மேல் அபிமானம் வைத்துள்ளார்கள் தாழ்த்தப்பட்டவர்கள்.

தங்களுக்குப் போர்க்குணத்தோடு போராடுவதைக் கற்றுக் கொடுத்த கையோடு காசு வாங்கிச் செயல்படும் தாதாவாகிவிட்டார் ஜான் பாண்டியன் என்கிறார்கள் அனைத்துக் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள். சமீபத்தில் பரோலில் வந்த ஜான் பாண்டியன் நெல்லையில் அ.தி.மு.க.விற்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கை காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஜான் பாண்டியன் மீது கடும் சினம் கொண்டிருக்கிறார்கள். இவரால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு வழக்குகளில் சிக்குண்டு சிறையில் வாடுவதாகவும், குடும்பம் தெருவில் நிற்பதாகவும் தெரிவித்தார் மருதன்வாழ்வு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

பல தலைமுறைகளாகத் தமக்கென தலைமை இல்லாத நேரத்தில், தம்மை அடையாளப்படுத்த வந்த தலைவனாக, ''அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரி'', என ஜான் பாண்டியனை ஏற்றுக் கொள்கின்றனர் தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர். ''இன்றைக்கு படித்த, டெல்லி வரை சென்று பேசும் திறமை உள்ள தலைவன்தான் வேண்டும். அந்த வகையில் கிருஷ்ணசாமிக்கு ஆதரவு இருக்கின்றது. இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் எங்கும் கட்சிக் கொடி கிடையாது. கடந்த தேர்தலில் அதிமுக., காங்கிரசுக்கு வாக்களித்தோம்; இனி எங்கள் சமுதாயத்துக்குப் பாடுபடும் கட்சி சார்பற்ற நபர்களுக்கே வாக்களிப்போம்'' என்ற கருத்தையும் சிலர் தெரிவித்தனர். ''குட்டையைக் குழப்பியவனுக்கு ஆதாயம்'' என்று அரசியல் கட்சிகள் நடந்து கொள்வதற்கு ஏதுவான சூழ்நிலையே உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் சாராயம் காய்ச்சுவது தொழிலாக உள்ளது. பெருமளவு தேவர் சமூகமும், சில இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களும் காய்ச்சுகிறார்கள். சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக மாறிவிட்டதால், தனி நபர்களின் ஆதிக்கம் இல்லை. சாராயம் கிராம வாழ்க்கையின் அங்கமாக மாறிவிட்டதும் உண்மையே. ஒரு கிராமத்தில் மட்டும் சாராயத்தினால் கடந்த இரண்டு வருடங்களில் 7 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.



தற்போதைய சாதிக் கலவரத்திற்கு காரணம் சாராயம் காய்ச்சுபவர்களிடையே நடக்கும் சண்டை என்பது சரியல்ல. அதே சமயம் நகர்ப்புறங்களில் இதன் மூலம் உருவான தாதாக்களின் ஆதிக்கச் சண்டை இருக்கிறது. தற்போது பெருமளவு தேவர் சாதி தாதாக்கள் ஆதிக்கம் செய்து வந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களிடையே இத்தகைய தாதாக்கள் உருவாவதற்கான அடித்தளம் இருக்கிறது. நெல்லை ஊருடையான் குடியிருப்பில் கொல்லப்பட்ட வேல்சாமி என்ற ஒரு பா.ம.க. பிரமுகர் தாழ்த்தப்பட்டவர். மேற்படி வகையில் உருவான தாதா இவர். நகர்ப்புற வளர்ச்சியில் உதிரிப் பாட்டாளிகளின் எண்ணிக்கை அதிகமாகும் போது இவற்றைத் தடுக்க இயலாது.

தேவர்களின் ஆதிக்க மனோபலம், கலவரத்தைத் தொடர்ந்து நடத்துகின்றது என்பதினால் தேவர்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் குற்றவாளிகள் அல்லர். சங்கரன் கோவில் அரசு பள்ளி மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டு, கொல்லப்பட்ட தேவர் சாதி இளைஞரான முருகன் ஒரு அப்பாவி; திருப்பூரில் வேலை செய்து வந்தவர். தீபாவளிக்கு ஊர் திரும்பிய நேரத்தில் கொல்லப்பட்டார். இவரை எடுத்து வளர்த்த தாய்மாமன் சண்முகப் பாண்டி சிறு விவசாயி, ''இவ்வளவு நடந்த பிறகும் சும்மாதான் இருக்கோம். தினசரி நாங்கள் (எஸ்.சி.-தேவர்) ஒருவருக்கொருவர் முகத்தில் விழிக்க வேண்டியிருக்கிறது. வயலில் ஒன்றாகத்தான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. முன்பு இருந்தது போல் அல்லாமல் இப்போது திருந்தி வாழ்கிறோம்'', என்கிறார்.

தாழ்த்தப்பட்டவர்களில் அனைவரும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் எண்ணம் கொண்டவர்கள் அல்ல. இங்கும் வர்க்கரீதியான வேறுபாடு இருக்கிறது. ''அரசு வேலை செய்பவர்கள் எங்களோடு போராட வரமாட்டார்கள். அவர்கள் வேலை போய்விடும். காட்ல வேலை செய்றவங்கதான் எதுக்கும் ரெடி.'' என்கிறார்கள் மலைப்பட்டி தாழ்த்தப்பட்ட இளைஞர்கள். தென்கறி சிந்தாமணி அருகே 10 ஏக்கர் நஞ்சை, மாளிகை வீடு, வில்லுவண்டி என்று வாழும் ஊர் நாட்டாமை ஈஸ்வரன், ஒரு தாழ்த்தப்பட்டவர். ''அவங்கவங்க வேலையைக் கவனிக்கணும்; தீய வழிகளில் போகக் கூடாது. அதிகாரிகளிடம் முறையிடுவதன் மூலம் பிரச்சினையை சமாதான வழிகளில் தீர்க்கலாம்'' என்று குட்டி முதலாளித்துவ வர்க்க உணர்வில் இருந்து பேசுகிறார்.

இக்காலகட்டத்தில் வட மாவட்டங்களில் பறையர்களிடையே செல்வாக்கு பெற்றிருக்கின்ற எல்லா தாழ்த்தப்பட்டவர் அமைப்புகளும் கமுக்கமாக இருப்பதையும் கவனிக்க வேண்டும். தெற்கே பள்ளர்களை அடக்கி ஒடுக்கும் ஜெயலலிதாவை, வடக்கே அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மூர்த்தி, தனது அமைப்பின் 2-வது மாநில மாநாட்டிற்கு அழைப்பதை என்னவென்று சொல்வது? தாழ்த்தப்பட்ட மக்களைச் சாதிய ரீதியில் தனிமைப்படுத்தி, விற்றுப் பிழைக்கும் இவர்கள், உழைக்கும் மக்களை சாதிரீதியாகப் பிளக்கும் மேல்சாதி வெறியர்களைப் போன்றே குற்றவாளிகள்தான்.

தென் மாவட்டங்களில் இப்போது நடக்கும் மிக முக்கியமான உண்மை என்னவென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் சமு

www.padippakam.com

# 'அமைதி' வேண்டும் அரசியல் கட்சிகள்

''ஆயிரம் உண்டிங்கு சாதி; எனில் அந்நியர் புகலென்ன நீதி'' என்று பாடிய பாரதி சிலை முன்பு ஆரம்பித்து 4 இரத வீதிகளையும் கடகடவென்று சுற்றி வந்து காந்தி சிலை முன்பு ஊர்வலம் முடிப்பது என்ன பிரயோசனம்? எந்த அரசியல் கட்சியும் உணர்வுபூர்வமாக செயல்படவில்லை'' என்கிறார் **நெல்லை நகர வழக்கறிஞர் தங்கசாமி.**

☆ ''இங்கு மாவட்டம் முதல் ஒன்றியம் வரை எல்லாக் கட்சிகளிலும் தேவர் ஆதிக்கம்தான். என்னைக் கட்சியில் இருந்து நீக்கினாலும் பரவாயில்லை.



எந்தக் கட்சியும் தேவர்களின் ஆதிக்கத்தைக் கண்டிக்க முன்வரவில்லை!

**— ஆறுமுகம், சி.பி.ஐ. தென்காசி நகர துணைச் செயலாளர், தாழ்த்தப்பட்டவர்.**

எல்லாக் கட்சிகளின் தலைமையிலும் தேவர்களே இருக்கும் போது எப்படி நடுநிலையாக, நியாயமாக செயல்பட முடியும்?

செய்த பாவத்தைக் கழுவ நெல்லையில் 5,000 ஏழை ஜோடிகளுக்குத் திருமணம்; அதில் 50% தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படும் என அறிவித்தார் ஜெயா. (பின்னர் மாற்றப்பட்டது)

☆ தென் மாவட்டங்களில் தேவர்களின் ஆதிக்கத்தை வைத்தே கட்சி வளர்த்த தி.மு.க. ஓர் ஆய்வுக்குழுவினை அனுப்பித் தனது கடமையை முடித்துக் கொண்டது.

☆ சி.பி.எம்., சி.பி.ஐ. - போலிக் கம்யூனிஸ்டுகள் ஒரு.வார இடைவெளியில் ஆளுக்கொரு அமைதிப் பேரணியை நடத்திக் கடனைக் கழித்தார்கள்.

☆ ம.தி.மு.க. மாவட்டச்செயலாளர்சமாதானக் கமிட்டிக் கூட்டத்தில், ''கலவரத்திற்கு யாரைக் குற்றம் சாட்டினாலும் ஓட்டுப் போடமாட்டார்கள்'' என்று வெளிப்படையாக ஒத்துக் கொண்டார்.

☆ ''காவல் - நீதித் துறைகளுக்கு சாதிக் கண்ணோட்டம் இல்லாத வேற்று மாநில அதிகாரிகளை நியமிக்க வேண்டும்'' (இதை ரொம்பவும் வலியுறுத்துங்கள்)

**— தி.க. நெல்லை மாவட்டப் பொறுப்பாளர்களில் ஒருவர்**

☆ ''கொடியன்குளம் கிராமத்திற்கு நீங்கள் ஏன் போகவில்லை என்று நண்பர் ஒருவர் கேட்டதற்கு, ''எப்படிப் போவது? மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.எஸ்.ஆர்.எல். பாண்டியன் (தேவர்) கூடவே வரும்போது என்ன செய்வது?''

**— மங்களா ஜவஹர்லால் (நாடார்) ஜனதா தளம்-மாவட்டத் தலைவர்**

☆ ''எங்களுக்கு அருகில் அதிகாரிகள் விசாரணைக்கு வந்தபோது, எஸ்.சி.க்கள் அடிபட்டது போல் நடித்ததைக் கண்டுபிடித்தார்கள். இங்கு அனைவரும் சமமாக வாழ்கிறோம். அதே சமயம் ஒரு எஸ்.சி. இங்கு வீட்டுக்குள் (மேல்சாதி) அமர்ந்து சாப்பிட்டால் தான் சரிசமம் என்பது சரியல்ல. காலனிக்கு என்று தனி டீக்கடை உள்ளது. பறையர்கள், சக்கிலியருக்கு அனைத்துச் சலுகைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டாண்டு காலமாக கிராமம் எப்படி இருக்கிறதோ அதே வழியில் இருக்கிறது. ஒன்றும் பிரச்சனையில்லை.''

**— சட்டநாதன், மேலநீத நல்லூர் ஒன்றிய DYFI தலைவர் (கோனார்).**

''தேவர் பேரவைக்கும், வன்னியர் சங்கத்துக்கும் 20 வருடங்களுக்கு மேலாக சண்டை உண்டு. இரு சாதிகளுக்கும் தமிழக அரசியலின் மையத்தை பிடிப்பதில் போட்டி உண்டு. பா.ம.க. ராம்தாஸ் எஸ்.சி. ஊர் நாட்டாமைகளை சந்தித்து பேசியதும் கலவரத்திற்கு காரணம்.



''இடைகாலில் தேவர்சிலையில் ஆபாசமாக எழுதி ஒட்டியது ஒரு தேவர் தான். அவரைக் கண்டுபிடித்து ஊரார் ஒரு லட்சம் அபராதம் விதித்தனர். அதே போல நன்னகரத்தில் அம்பேத்கர் சிலையை உடைத்தது தாழ்த்தப்பட்டவர்கள்தான்''

**— கனக முத்துராஜ் பாண்டி, வழக்கறிஞர், தி.மு.க. பிரமுகர் (தேவர்) தென்காசி.**

---

கரீதியிலும் கலாச்சாரரீதியிலும் சமத்துவத்தை - விடுதலையை அடைய முனைகிறார்கள். கலவரங்கள் - பேரிழப்புகள், வன்முறை - எதிர்த்தாக்குதல் - எழுச்சி இல்லாமல் அதைச் சாதிக்கவே முடியாது; தாழ்த்தப்பட்ட மக்கள், அதிலும் பள்ளர் பிரிவினர் மட்டும் தனித்தனி அமைப்புகளில் திரண்டு அதைச் சாதிக்க முயலுவதும் பலிக்காது. பையப்பையத்தான் சமூக மாற்றங்கள் நடந்து வருகின்றன என்றாலும், முந்தைய தலைமுறையைப் போல தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தலாம் என்கிற மேல்சாதி முயற்சியும் ஒடுக்குமுறையும் தேவர்களுக்கும் அழிவைத்தான் இழப்பைத்தான் தருமே தவிர எப்போதும் ஏறி மிதிப்பது பலிக்காது. குறிப்பாக தாமே 2000 ஆண்டுகளாகச் சாதி - சமூக நீதியில் ஒடுக்கப்பட்டு வந்ததாகக் கூறிக் கொண்டு வகுப்புரிமை - சலுகைகள் பெறும் தேவர் சாதியினர் மற்ற பிற சாதிகளை ஒடுக்கி ஆதிக்கம் புரிவதைத் தொடர எத்தனிப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இந்த உண்மைகளைப் பகிரங்கமாக முன்வைத்து, கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுக்காது ''பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்'' என்று அமைதி நாடகம் ஆடும் அரசியல் கட்சிகள் எல்லாம் உண்மையில் சாதி ஆதிக்கத்துக்குத் துணை போகிறவர்கள்தாம்.

20 ஆண்டுகால பொருளியல் மாற்றங்கள் நடந்த அளவு சமூக உறவுகளில் மாற்றம் எதுவும் நடந்து விடவில்லை. ''தாம் அடிமைகளல்ல'' என்று பிரகடனப்படுத்தும் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளின் போராட்டம் அத்தகைய மாற்றத்தைக் கொண்டு வரும். மாறாக படித்துப் பட்டம் வாங்கி பதவியில் அமருவதாலோ, சீர்திருத்தப் பாதைகளினாலோ துரிதமான சமூக மாற்றம் வந்துவிடாது என்பதைத் தென் மாவட்டக் கலவரங்கள் நமக்கு மீண்டும் உணர்த்துகின்றன.

நமது நாட்டின் சமூக மாற்றம் என்பது புரட்சிகர வழிகளில் அல்லாது சீர்திருத்த முறையில் மெதுவாகவும், பலத்த துயரங்களும் இழப்புக்களைக் கொண்டதாகவும்தான் இன்னமும் நடக்கிறது. புரட்சிகரமான சமூக மாற்றத்தைக் கொண்டு வரும் முகமாக புரட்சிகர அமைப்புகள் வளர வேண்டிய அவசியத்தையும் இது உணர்த்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தேவர் சாதி ஆதிக்கம்

தேவர் சாதி மக்களில் - விவசாயம் செய்பவர்கள், உடலுழைப்பாளர்கள், படித்த முற்போக்காளர்கள் கணிசமான அளவில் இருந்தாலும், தேவர்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் இவர்கள் அல்லர். அரசியல் - சமூக - பொருளாதாரத்தில் ஆதிக்கம் செய்யும் வேறு பிரிவினரே இப்போது தேவர் சமூக 'கௌரவத்தை' நிலைநாட்டப் போர் புரிகின்றனர். 70-களில் சாராயம் காய்ச்சியவர்கள், கிராமங்களில் சிட்டா வட்டி எனப்படும் கொள்ளை வட்டி மூலம் பணம் குவித்தவர்கள், சில்லரை அடாவடித்தனங்கள் செய்தவர்கள் நகரமயமாக்கம் நடந்தவுடன் நகரங்களை நோக்கி படையெடுத்தார்கள்.

இன்று இவர்கள் தமது பெயருக்குப் பிறகு 'பாண்டியன்' என்றும், தொழிலதிபர் என்றும் பெயர் வைத்துக் கொண்டார்கள். வட்டி-கடன் மூலம் சொத்துக்களைக் கைப்பற்றுதல், பிராந்திக் கடைகள், காண்ட்ராக்ட், சினிமா, லாரி-போக்குவரத்துத் தொழில்கள், பொதுச் சொத்துக்களை ஏலம் எடுப்பது, வீட்டு மனை விற்பனை, கள்ளச் சாராயச் சந்தை என்று தமது சாம்ராஜ்யத்தை நிறுவிக் கொண்டு, போலீசு - அதிகாரிகள் - கட்சிகள் - வழக்கறிஞர்கள் அனைவருடனும் கூட்டணி சேர்ந்து கொண்டு, நவீன ''ஜமீன்தார்களாக'' உலா வருகிறார்கள்.

**ஒரு சில 'பாண்டியர்கள்'**

**காசிப்பாண்டி** - முன்னாள் சாராய வியாபாரி; இன்று அ.தி.மு.க. ஆதரவுடன் தொழிலதிபர். தற்போது கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார்.

**பாண்டி** - தாழையூத்துவைச் சேர்ந்தவர். ம.தி.மு.வைச் சேர்ந்த இவருக்கு இன்றும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதுதான் தொழில்.

**பிச்சபாண்டி** - சொந்த ஊர் தச்சநல்லூர்; கள்ளச் சாராயம் காய்ச்சுவதுதான் தொழில்.

**இசக்கிபாண்டி** - 10 வருடம் முன்பு ஒரு சாராயக் கொலை வழக்கில் முதல் எதிரி. தற்போது தொழிலதிபர். நெல்லை புகை வண்டி நிலையம் 3 மாடி வணிக வளாகத்திற்குச் சொந்தக்காரர்.

**ராமசாமி பாண்டியன்** - கடம்பூரில் 2 திரையரங்குகளுக்குச் சொந்தக்காரர், கயத்தாறு ஆட்டுச் சந்தையை ஆட்டுவிப்பவர்; வட்டார அதிகாரி.

**கருத்த பாண்டியன்** - தாழையூத்து தேவர் பேரவை இளைஞர் அணி பிரமுகர்; அப்பா கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதி. தற்போது கலவர வழக்கில் சிறையில் உள்ளார்.

**தங்கராஜ் பாண்டியன்** - அ.தி.மு.க.வைச் சேர்ந்த பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர். முன்பு லட்சக்கணக்கில் பணம் போட்டு சாராயம் காய்ச்சியவர்.

**கருப்ப சாமி பாண்டியன்** - அ.தி.மு.க. நெல்லை மாவட்ட செயலாளர்; பல கோடி ரூபாய்களுக்கு சில ஒப்பந்தங்களை எடுத்துத் தொழில் செய்யும் அரசியல் பிரமுகர்.

★★★

தம் சாதியைச் சேர்ந்த கிரிமினல்களைக் குற்றவாளிகளாகப் பார்க்காமல் உறவு முறை வைத்து உரிமை கொண்டாடுவது (மற்ற சமூகங்களில் இல்லாத ஒன்று) தேவர் சமூகத்தில் அதிகமாக உள்ளதை அனைத்துப் பிரமுகர்களும் கூறினார்கள். வர்க்கரீதியாக கீழ்நிலையில் உள்ள தம் சொந்த சாதி தேவர்களோடு மண உறவு வைப்பது என்பதையும் இழிவானதாகக் கருதுகிறார்கள். சமீபத்தில் பாளையங்கோட்டையில், ஒரு தேவர் சாதியைச் சேர்ந்த பெண் போலீசு உதவி ஆய்வாளரின் தங்கை, தன் வீட்டில் வேலை செய்து வந்த தேவர் இளைஞனோடு திருமணம் செய்து கொண்ட போது, அவரது உறவினர்கள் மணமக்கள் இருவரையும் வெட்டிக் கொன்றது இதற்கோர் உதாரணம். இப்படி கலாச்சார ரீதியாகப் பின் தங்கியும் தனது சாதிக்குள்ளேயே ஆதிக்க மனோபாவத்துடனும் நடந்து வரும் தேவர் சாதியினர், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பள்ளர்களை எப்படிப்பட்ட அடிமை நிலையில் இருத்தி வைத்திருப்பார்கள்?

**நெல்லை நகரக் கல்லூரிகளில் ஒவ்வொரு வருடமும் கல்லூரி ஆண்டு விழா நடக்கிறதோ இல்லையோ தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், தேவர் சாதி தலைமையிலான பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இடையே சண்டை கண்டிப்பாக நடக்கிறது.**

போலீசின் பாதுகாப்பு யாருக்கு?



நெல்லை மாவட்டத்தில் நிலவுடமை மாற்றத்தினால் பெரிதும் பயனடைந்தவர்கள் தேவர் சமூகத்தினரே. அம்பாசமுத்திரம், நாங்குநேரி போன்ற தாலுகாக்களில் முன்பு நிலவுடமையாளர்களாகப் பார்ப்பனர்களும், பிள்ளைமாரும் இருந்தனர். 1956-இல் இருந்து 1970-வரை குத்தகை விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் இருந்த தேவர்கள் போலிக் கம்யூனிஸ்டுகள் (இ.பொ.க.) தலைமையில் விவசாயச் சங்கம் அமைத்துப் போராடினார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பல வழக்குகள் நடைபெற்றன. தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் மேல் சாதியினர் தமது நிலங்களைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டோ, தரிசாகப் போட்டு விட்டோ அகன்றனர். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற முறையில் சில தேவர்கள் நிலஉடமையாளர்களாக மாறியவுடன் அதற்கு முன்னால் குத்தகை விவசாயிகளாக இருந்த தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயக் கூலிகளாக மாற்றப்பட்டனர். இன்றுவரை அம்பை, சேரன்மாதேவி, நாங்குநேரி, வள்ளியூர், வட்டாரங்களில் தேவர் ஆதிக்கத்தின் கீழ் அடக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். தற்போதுகூட இப்பகுதிகளில் மோதல் இல்லை என்பதன் காரணம் மேற்சொன்ன நிலைமைகளே.

அக்காலக் கட்டத்தில் போராடிய இ.பொ.க. தலைவர்கள் இன்றைக்கும் தலைமையில் இருக்கிறார்கள். அன்று சாதிய உணர்வின்றி விவசாயிகளை அணிதிரட்டிப் போராடினார்கள் என்பது உண்மை. அதேசமயம், ஏற்கனவே சமூக ஆதிக்கம் பெற்றிருந்த தேவர்களே பலனடைந்தனர் என்பதும் உண்மையாகும். அதன் பின் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்த போலிக் கம்யூனிஸ்டுகள் இன்றுவரை தேவர் சாதி ஆதிக்கத்தை

தொடர்ச்சி 18-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com



## மோசடியே மூலதனம்

**மோ**சடித் தரகுப் பெருமுதலாளியான அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தின் போலி பங்குப் பத்திர விற்பனை தொடர்பாக எழுந்த தகராறையொட்டி, பம்பாய் பங்குச் சந்தையே செயல்பட முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. ரிலையன்ஸ் நிறுவனம் வெளியிட்ட பங்குகளை வாங்கிய ஒரு வாடிக்கையாளர் அதில் 1.06 கோடி ரூபாய் மதிப்புடைய 26,650 பங்குகள் போலியானவை என்பதை அறிந்ததும் பம்பாய் பங்குச் சந்தையில் இது பற்றி முறையிட்டார். அதைத்தொடர்ந்து பம்பாய் பங்குச் சந்தை, ரிலையன்ஸ் நிறுவனத்தின் பங்குப் பத்திர வர்த்தக நடவடிக்கைகளைக் கடந்த நவம்பர் 29 முதலாக மூன்று நாட்களுக்கு முடக்கி வைப்பதாக அறிவித்தது. இதனால் ஆத்திரமடைந்த அம்பாணி, தனது நிறுவனத்தை பம்பாய் பங்குச் சந்தையிலிருந்து விலக்கிக் கொண்டு, டெல்லி பங்குச் சந்தையில் இணைக்கப் போவதாக எச்சரித்தார். பம்பாய் பங்குச்சந்தையின் மிக முக்கிய சூதாட்டக் காயாக விளங்கும் ரிலையன்ஸ் நிறுவனம் விலகிக் கொண்டால், பங்குச் சந்தை வர்த்தகமே முடங்கிப் போய் விடும் என்பதால் பீதியடைந்த பங்குச் சந்தை அதிகாரிகள் காலில் விழாத குறையாக அம்பாணியிடம் கெஞ்சி சமரசப்படுத்தியுள்ளனர். ஆனாலும் போலியான - மோசடியான பங்குப் பத்திர பீதி காரணமாக பங்குச் சந்தை வர்த்தகமே முடங்கிக் கிடக்கிறது.



போலி பங்குபத்திர மோசடி மன்னன் அம்பானி; தனது வாரிசுகளுடன்

உண்மையான பங்கு பத்திரங்கள் பங்குதாரர்களிடமிருந்து காணாமல் போய்விட்டாலோ, சிதைந்துவிட்டாலோ, அதற்குப் பதிலாக தேவையான உத்திரவாதங்களைப் பெற்று, நகல் பங்குப் பத்திரங்கள் தரப்படுவது வழக்கம். அதேசமயம் இதற்கெனத் தனியாக விதிமுறைகள் எதுவும் வகுக்கப்படவில்லை. இதைச் சாதகமாக்கிக் கொண்டு பல தொழில் நிறுவனங்களும், தரகர்களும் போலியான பங்குகளை விநியோகித்துக் கொள்ளையடித்து வருகின்றனர். ரிலையன்ஸ் நிறுவனம், மைய அரசின் ''யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா''விற்கு 47 கோடி ரூபாய்க்குப் போலிப் பங்குகளை விற்றிருப்பதும் தற்பொழுது அம்பலமாகியுள்ளது. இது பற்றி வங்கி - பங்குச் சந்தை அதிகாரிகள் அறிந்திருந்த போதிலும் கொள்ளையில் கூட்டுச் சேர்ந்திருப்பதால் வாய் திறப்பதில்லை. இப்போது அம்பலமாகியுள்ள விவகாரங்கள்கூட மோசடிக் கடலில் வெளியே தலை காட்டிய ஒரு சிறு விவகாரம்தான். இன்னும் வெளியே தெரியாத விவகாரங்கள் ஏராளமாக உள்ளன.

ரிலையன்ஸ் நிறுவனத்தின் மீது எந்த நடவடிக்கையுமின்றி சமரசப்படுத்தியதன் விளைவாக, இம்மோசடியை அங்கீகரித்துள்ளதோடு, நாளை எந்தவொரு நிறுவனமும் இத்தகைய மோசடியில் இறங்க பம்பாய் பங்குச் சந்தை அனுமதியளித்துள்ளது.

மோசடி நாயகன் அர்ஷத் மேத்தாவைக் கைது செய்து, பங்குச் சந்தை மோசடிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாக ஆட்சியாளர்கள் பசப்பினார்கள். ஆனால் பெருகிவரும் தில்லுமுல்லு, மோசடிகளால் ஓராயிரம் அர்ஷத்மேத்தாக்கள் உருவாகி விட்டார்கள் என்பதையே பம்பாய் பங்குச் சந்தை விவகாரம் தெளிவாக்குகிறது.

## காங்கிரசுக்குப் போட்டியாக நாட்டை விற்கும் ஜனதா தளம்

**கா**ங்கிரசுக் கயவாளிகளின் தாராளமயக் கொள்கையை எதிர்ப்பதாகச் சவடால் அடிக்கும் எதிர்க்கட்சிகள், இப்போது காங்கிரசுக்குப் போட்டியாக நாட்டையே விற்கக் கிளம்பிவிட்டன. குறிப்பாக, கர்நாடக ஜனதா தள அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக விவசாய விளைநிலங்களை அந்நிய நிறுவனங்களுக்குத் தாரை வார்க்க முடிவு செய்துள்ளது. 1974-ம் நிலச் சீர்திருத்த சட்டத்தில் முக்கியமாகப் பல மாற்றங்களைக் கர்நாடக அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

இதன்படி, விவசாய நிலத்தை வாடகைக்கு விடவும் குத்தகைக்கு விடவும் முன்பு விதிக்கப்பட்டிருந்த தடை இப்போது முற்றாக நீக்கப்பட்டுள்ளது. கடற்கரை மாவட்டங்களில் விவசாய நிலத்தை 20 ஆண்டுகளுக்கு இறால் பண்ணையாக மாற்றி அமைக்க இப்போது அனுமதி தரப்பட்டுள்ளது. நன்செய் நிலத்திற்கு 10 ஏக்கர், புன்செய் நிலத்திற்கு 54 ஏக்கர் என விதிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பு இப்போது தளர்த்தப்பட்டு அவை முறையே 40 ஏக்கர், 216 ஏக்கர் என விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சி, தீவிர விவசாய சாகுபடி, கல்வி நிலையம், வழிபாட்டுக் கூடம், வீட்டு மனை, பழப் பெருக்குத் திட்டம் என்ற பெயரில் இப்போது விளைநிலங்களை யாரும் வாங்க முடியும்.

இதன் விளைவாக, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் எவ்விதத் தடையுமின்றி விவசாய விளைநிலங்களை ஆக்கிரமிக்கும்; அந்நிய மூலதனமும் கருப்புப் பணமும் வெள்ளமெனப் பாயும்; சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும்; விவசாயமே சூறையாடப்பட்டு விவசாயிகள் ஓட்டாண்டிகளாவார்கள்; மாநிலத்தின் உணவு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஏகாதிபத்தியங்களிடம் கஞ்சிக்குக் கையேந்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அறிந்து கர்நாடக விவசாயிகளும் சுற்றுச் சூழல்வாதிகளும் போர்க் கொடி தூக்கியுள்ளனர். கடந்த நவம்பர் 2-ம் நாளன்று கர்நாடக மாநில விவசாய சங்கத்தினர் (KRRS) தலைநகர் பெங்களூரில் அரசின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்த்து மாபெரும் பேரணி நடத்தியுள்ளனர். புதிய நிலச் சீர்திருத்த சட்ட மசோதா நகல் எரிப்புப் போராட்டம், கடையடைப்புப் போராட்டம் எனத் தொடர்கின்றனர்.

விவசாயிகளின் போராட்டம் தீவிரமானதும், ஜனதா தள அரசின் புதிய நிலச்சீர்திருத்தக் கொள்கையை எதிர்ப்பதாகக் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் வேஷங்கட்டி ஆடுகின்றன. ஆனால் சட்டசபையில் இதற்கான மசோதா கொண்டு வரப்பட்ட போது, வேறொரு பிரச்சினையைக் காட்டி வெளிநடப்பு செய்த இக்கட்சிகள், எவ்வித விவாதமும் இன்றி இம்மசோதாவை நிறைவேற்றத் திட்டமிட்டே வேலை செய்துள்ளனர். விவசாய விளைநிலங்களை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்க்கும் கொள்கையானது, உலக வங்கியின் உத்திரவுப்படியான கட்டுமான மாற்றக் கொள்கையின் (SAP) ஓர் அங்கம்தான். ''காட்'' ஒப்பந்தத்தின் ஒரு பிரிவுதான். நேற்றுவரை இக்



படிப்பகம்

www.padippakam.com



கொள்கைகளை எதிர்ப்பதாகப் பசப்பிய எதிர்க்கட்சிகள், இன்று பதவிக்கு வந்ததும் காங்கிரசைவிடத் தீவிரமாக நடைமுறைப்படுத்தக் கிளம்பிவிட்டன. நாட்டை மறு அடகு வைப்பதில் காங்கிரசுக் கயவாளிகளுக்குச் சற்றும் சளைக்காத துரோகிகள் தாங்கள் தான் என்பதை அவை நிரூபித்துக் காட்டிவிட்டன.

## தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் பகற் கொள்ளை மோசடி

நாடெங்குமுள்ள 1.8 கோடி தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்காகத் ''தொழிலாளர் ஓய்வூதியத் (பென்ஷன்) திட்டம்'' என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இதற்கான அவசர சட்டமொன்று கடந்த நவம்பர் மாதம் 16-ந் தேதியன்று குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டது. ''கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த' பகற்கொள்ளைக்கு ஈடாது, இத்திட்டம்.

இப்புதிய திட்டத்திற்கு முன்பாக, ''தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்''தினைக் கடந்த இருபது வருடங்களாக மைய அரசு நடைமுறைப்படுத்தி வந்தது. தனியார் துறையைச் சேர்ந்த ஒவ்வொரு தொழிலாளியும் தனது மாத ஊதியத்தில் 1.16 சதவீதப் பங்கினையும், அரசாங்கமும் முதலாளிகளும் முறையே தங்கள் பங்காக 1.17/1.16 சதவீதத் தொகையினையும் பழைய குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு நிதியாகச் செலுத்தி வந்தனர். தற்பொழுது இப்பழைய திட்டத்தைக் கைகழுவி விட்டது, ராவ் கும்பல். அதே சமயம் புதிய திட்டத்திற்குத் தனியாக நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. மாறாக, பழைய குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மைய அரசிடம் இருந்த 8,500 கோடி ரூபாயைப் புதிய திட்டத்திற்குத் திருப்பிவிட்டு மாய்மாலம் செய்கிறது.

இதைவிடப் பெரிய மோசடியொன்றும் இத்திட்டத்தில் உள்ளது. சேமநல நிதித் திட்டத்திற்கு (பிராவிடண்ட் ஃபண்ட்) தனியார் துறை ஊழியர்கள் தங்களின் அடிப்படை ஊதியத்தில் 8.33 சதவீதத் தொகையினை 12 சதவீத வட்டியுடன் இனிப் பெற முடியாது. மேலும் இத்தொகையில் இருந்து இடையிடையே கடன் பெறவும் முடியாது; தாங்கள் செலுத்தும் சேம நல நிதித் தொகையில் இருந்து மட்டும்தான் கடன் பெறவும், ஓய்வு பெறும்பொழுது அதனை மட்டுமே திரும்பப் பெறவும் முடியும். இதனால் தொழிலாளர்கள் திருமணம், மருத்துவம் போன்ற அவசரத் தேவைகளுக்காக கடனாகப் பெறும் தொகை குறைந்து, கந்து வட்டிக் கடன் வலையில் சிக்க நேரிடும். மேலும், இப்புதிய திட்டத்தின்படி தொழிலாளர்கள் பணி ஓய்வு பெறும்பொழுது குறைந்தபட்சமாக ஐநூறு ரூபாயும் அதிகபட்சமாக மூவாயிரம் ரூபாய் வரை ஓய்வூதியமாகப் பெற முடியும். விலைவாசிப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப இத்தொகையினைக் கூட்டித்தர மைய அரசு ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, பண வீக்கத்தோடு ஒப்பீடும் பொழுது ஓய்வூதியம் வருங்காலங்களில் அற்பமானதாகத்தான் இருக்கும்.

இப்படித் தொழிலாளர்களின் உரிமைகளும் பணச் சலுகைகளும் பறிக்கப்படுவதன் காரணமாக பல்வேறு தொழிற்சங்கங்கள் கடந்த இரு வருடங்களாக இப்புதிய திட்டம் சட்டமாவதை எதிர்த்து வந்தன. ஆனால், ராவ் கும்பலோ தனது பணப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடர் கூடும் முன்பாகவே, குறுக்கு வழியில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று இதனைச் சட்டமாக்கிவிட்டது. அரசு ஊழியர்கள் என்றால் ஊதிய உயர்வு முடக்கம், பஞ்சப்படி உயர்வு முடக்கம், வேலைப் பளுவைக் கூட்டுவது எனப் பொருளாதாரத் தாக்குதல்தொடுக்கும் இக்கும்பல், இத்திட்டத்தின் மூலம் மேலும் தொழிலாளர்கள், ஊழியர்கள் மீது இன்னொரு தாக்குதலை தொடுத்துள்ளது.




புதிய ஓய்வூதிய அவசர சட்டத்தைத் திரும்பப் பெறக்கோரி பம்பாயில் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி

## கட்சி சாராதவர்களைக் கொண்டு கட்சிப் பத்திரிகை நடத்தும் போலிகள்

கேரளாவிலிருந்து ''தேசாபிமானி'', மே.வங்கத்திலிருந்து ''ஜனசக்தி'', தமிழகத்திலிருந்து ''தீக்கதிர்'' ஆகிய நாளேடுகளை நடத்திவரும் 'மார்க்சிஸ்டு'கள். இப்போது சண்டிகாரிலிருந்து ''தேஷ் சேவக்'' எனும் பஞ்சாபி நாளேட்டை வரும் புத்தாண்டு நாளிலிருந்து வெளியிட உள்ளனர். 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொதுச்செயலாளரான சுர்ஜித் சிங் ஆலோசனைப்படி நடத்தப்படும் இப்பத்திரிகை கட்சிக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அது முற்றிலும் மாறுபட்டதாக இருக்குமாம்! ''இந்நாளேட்டின் ஆசிரியர் குழுவினர் கட்சி சாராதவர்களாக இருப்பார்கள்; கட்சியின் ஊதுகுழலாக இல்லாமல் அனைத்துத் தரப்பினரையும் கவரும் வண்ணம் ஜனரஞ்சகமாக இந்நாளேடு இருக்கும்'' என்கிறார் சுர்ஜித். ஏறத்தாழ 6 கோடி ரூபாய் நிதி திரட்டப்பட்டு, புதிய கட்டிடம் எழுப்பப்பட்டு நவீன எந்திர சாதனங்கள் நிறுவப்பட்டு விட்டன. எழுத்தாளர்கள், செய்தியாளர்கள், ஊழியர்கள், நிர்வாகிகள் முதலானோரைக் கட்சிக்கு வெளியே தேடுவதில் 'மார்க்சிஸ்டுகள்' முனைப்பாக உள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com



''கட்சியின் பிரச்சாரத்துக்காகவும் கிளர்ச்சிக்காகவுமே பத்திரிகையை நடத்த வேண்டும்; போராட்டத்துக்கு மக்களை அறைகூவியழைக்க, பிற்போக்கு ஆட்சியை அம்பலப்படுத்த ஓர் அரங்கமாக அது இருக்க வேண்டும். கட்சி சார்பு கடந்த எழுத்தாளர்கள் ஒழிக!'' என்று புரட்சிகர கட்சிப் பத்திரிகையின் தன்மைகளைத் தோழர் லெனின் கட்டிக் காட்டுகிறார். லெனினைப் பூசையறைப் படமாக்கி விட்டு போலிக் கம்யூனிஸ்டுகளோ, கட்சி சாராத எழுத்தாளர்களைக் கொண்டு ஜனரஞ்சகமாகப் பத்திரிகை நடத்திப் புரட்சி செய்யக் கிளம்பி விட்டார்கள். ஏற்கனவே தமது நாளேடுகளில் கிரிக்கெட், சினிமா, டி.வி, கோகோகோலா, ஆபாச விளம்பரச் செய்திகளை வெளியிட்டு வரும் இப்போலிகள், இன்னும் ஜனரஞ்சகமாகப் பத்திரிகை நடத்தப் போகிறார்கள் என்றால் அது எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. போலிகள், கைதேர்ந்த வியாபாரிகளாகி விட்டார்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்றும் தேவையில்லை.

## மலேரியா நோய் தாக்கியது 'மார்க்சிஸ்டு' அரசு செத்தது

போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கத்தில் கடந்த இரு மாதங்களாகப் பற்றிப் படர்ந்து வரும் மலேரியா நோயினால் ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 50-க்கும் மேலானோர் மாண்டு போயுள்ளனர். 'மார்க்சிஸ்டு' ஆட்சியில் மருத்துவ - சுகாதார வசதிகள் தொடர்ந்து




''மார்க்சிஸ்டு அரசு செத்துவிட்டது'' கல்கத்தாவில் எதிர்க்கட்சிகள் நடத்திய கொசுவலை பேரணி

புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக, 1990-லிருந்து ஆண்டுக்குச் சராசரியாக 16,000 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் போலிகளின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மாநிலத்தின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2.5 கோடி ரூபாய் மட்டுமே மலேரியா ஒழிப்புக்கென ஒதுக்கப்படுகிறது. இதில் 60% தொகை அதிகாரிகள், ஊழியர்களின் சம்பளத்திற்கே போய்விட்ட பிறகு எஞ்சிய ஒரு கோடி ரூபாயைக் கொண்டுதான் மாநிலம் முழுவதும் மலேரியாவை ஒழிக்க வேண்டும். ''இந்த அற்பத் தொகையைக் கொண்டு கல்கத்தா நகரில் கூட கொசுவை ஒழிக்க முடியாது'' என்று சுகாதார ஊழியர்களே கூறுகின்றனர்.

''கல்கத்தா மாநகராட்சியிடம் கொசு ஒழிப்பு இரசாயன மருந்துகளோ, எந்திர சாதனங்களோ கிடையாது. மருத்துவமனைகளில் மலேரியா நோய்க்கு உரிய மருந்துகளும் கிடையாது. நாளும் விரிவடைந்து வரும் நகர்ப்புற நிலைமைக்கேற்ப சுத்திகரிப்புப் பணிகள் முன்னேறாததால், குப்பைகளும் கழிவு நீர்த் தேக்கங்களும் பெருகிவிட்டன. இதனால், கல்கத்தா நகரம் மலேரியா கொசுக்களின் சொர்க்க பூமியாகி விட்டது'' என்று மலேரியா ஒழிப்புத் திட்ட (NMEP) ஊழியர்களே 'மார்க்சிஸ்டு' அரசின் யோக்கியதையை அம்பலப்படுத்துகின்றனர்.

மலேரியா நோய் பரவிய பிறகும் கூட, போலிகளின் அரசு உடனடியாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் தன்னெழுச்சியாகவும், எதிர்க்கட்சிகளின் தலைமையின் கீழும் அணிதிரண்டு, கொசு வலைகளுடன் ''அரசாங்கம் செத்து விட்டது'' என்று அம்பலப்படுத்திக் கண்டனப் பேரணிகளையும், நகராட்சியைச் சுற்றி முற்றுகைப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

''மே. வங்கத்தில் மலேரியா ஒழிக்கப்பட்டு விட்டது!'' என்று தமது 18 ஆண்டுகால சாதனைகளில் ஒன்றாகப் போலிகள் பீற்றிக் கொண்டனர். ''மே.வங்க 'இடது முன்னணி' அரசு, மக்களின் சேமநல அரசு; மக்களுக்கு உடனடி நிவாரணம் தரும் புரட்சிக்கு முந்தைய இடைக்கால அரசு'' என்று சவடால் அடித்தனர். ஆனால் பெருகிவரும் மலேரியா, போலிகளின் இந்த மாய்மாலங்களையும், மக்கள் நலனில் அக்கறையற்ற போக்கையும் திரை கிழித்துக் காட்டி விட்டது.

## தாராளமயக் கொள்கை சாதித்தது என்ன?

இந்தியப் பொருளாதாரம் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நாடு 21-ம் நூற்றாண்டை நோக்கி தொழில் மயமாகி வருகிறது. பணவீக்கமும் விலைவாசியும் குறையத் தொடங்கி விட்டது என்று மன்மோகன் சிங்கும், ப. சிதம்பரமும் ஓயாமல் புலம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அந்நியக் கடன் சுமை - வட்டி அதிகரிப்பு, அவற்றைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிர்பந்தம், ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி ஆகியவை காரணமாக அடுத்த சில மாதங்களில் அந்நியச் செலாவணி கையிருப்பு அதலபாதாளத்தில் வீழ்ந்துவிடும். இதனால் இந்தியா எந்த நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்ய முடியாமல் பொருளாதார திவால் நிலையை எட்டிவிடும் என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே எச்சரிக்கின்றனர். ராவ் கும்பல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்த மந்தமான பொருளாதார வளர்ச்சி கூட இன்று இல்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டைத் திவாலாக்கி படுதோல்வி அடைந்ததைத் தவிர, தாராளமயக் கொள்கை வேறொன்றையும் சாதிக்கவில்லை என்பதை அரசாங்கப் புள்ளி விபரங்களே நிரூபித்துக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



# போஸ்னியா: அமைதியின் பெயரால் அமெரிக்காவின் மேலாதிக்கம்

ஐரோப்பா கண்டத்திலுள்ள முன்னாள் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து சென்ற போஸ்னியாவில் கடந்த நான்காண்டுகளாகத் தொடரும் உள்நாட்டுப் போரினால் அச்சிறிய நாடும் மக்களும் குருதிச் சேற்றில் புதைந்து வருகிறார்கள். ஏறத்தாழ 2.5 லட்சம் பேர் கொல்லப்பட்டு, பெண்களும் குழந்தைகளும் உள்ளிட்ட 2 லட்சம் பேர் படுகாயமடைந்து, 20 லட்சம் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி அகதிகளாக அல்லற்பட்ட பிறகு, அமெரிக்க அதிபர் கிளிண்டன் ஏற்பாட்டின்படி இப்போது புதியதொரு 'அமைதி' ஒப்பந்தம் உருவாகியுள்ளது. ''டேடன்'' ஒப்பந்தம் எனப்படும் இப்புதிய ஒப்பந்தத்தின் மூலம், வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளான (NATO-நேட்டோ) அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் போஸ்னியாவில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில், பெருமளவில் தமது படைகளைக் குவித்து மேலாதிக்கம் செலுத்தக் கிளம்பியுள்ளன.

நான்காண்டுகளுக்கு முன்பு, முன்னாள் யூகோஸ்லாவியக் கூட்டமைப்பிலிருந்து குரேஷியாவும், ஸ்லோவேனியாவும் தனித் தனி நாடுகளாகப் பிரிந்ததும், எஞ்சியிருந்த போஸ்னியா, மாண்டேனீக்ரோ, செர்பியா ஆகிய மாநிலங்கள் மீது செர்பிய இனவெறியர்கள் தமது ராணுவத்தைக் கொண்டு ஆதிக்கம் செலுத்தினர். இதற்கெதிராகப் போராடிய போஸ்னியா, தன்னைத் தனிநாடாக அறிவித்துக் கொண்டது. போஸ்னியாவில் குரேஷிய இனத்தவர்களும் செர்பிய இனத்தவர்களும், முஸ்லீம்களும் சம அளவில் உள்ளனர். போஸ்னியாவில் உள்ள செர்பியர்களைக் காப்பது என்ற பெயரில், போஸ்னியாவையே கைப்பற்றும் நோக்கத்தோடு செர்பியா, தனது படைகளைக் குவித்து இதுவரை காணாத இனவெறி காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. செர்பிய இனவெறியர்களை முறியடித்து, குரேஷியர்களைக் காப்பது என்ற பெயரில் குரேஷியா எதிர்த்தாக்குதல் நடத்துகிறது. போஸ்னியாவை ஆக்கிரமித்துக் கொள்ள இருதரப்பு இனவெறியர்களும் முஸ்லீம்களை வேட்டையாடி விரட்டுகின்றனர். இவ்வளவுக்குப் பிறகும் ஐரோப்பிய 'நாகரீக' நாடுகள் இந்த இனவெறி நரவேட்டையைத் தடுத்து நிறுத்த உருப்படியான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இரத்த ஆறு ஓடும் போஸ்னியாவை செர்பியர்களும் குரேஷியர்களும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து பங்கிட்டுக் கொள்வது, முஸ்லீம்களை நாடற்றவர்களாக்கி அடிமைப்படுத்துவது, 60,000-க்கும் மேற்பட்ட ''நேட்டோ'' படைகளைக் குவித்துக் பால்கன் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்துவது, அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டி விட்டதாகப் பசப்புவது என்பதே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் நோக்கமாக உள்ளது. பாலஸ்தீனிய விவகாரம், அயர்லாந்து விவகாரம் போலவே போஸ்னிய விவகாரத்திலும் அமைதிக்கான தீர்வு கண்ட தீரர் என்று கூறிக் கொண்டு வரப்போகும் அதிபர் தேர்தலில் கிளிண்டன் ஓட்டுப் பொறுக்கும் உத்தியாகவே இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மேலாதிக்க நோக்கங்களுக்காக அவசர கோலத்தில் போடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தால் ஒரு போதும் அமைதியை உருவாக்க முடியாது. போஸ்னியா இனரீதியாகப் பிளவுபட்டு பங்கு போடபடுவதைத் தவிர வேறொன்றையும் சாதிக்கவும் முடியாது.



அமைதிப்படை என்ற பெயரில் போஸ்னியாவை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப்படை; உள்ளூர் மக்களுடன் உறவாடும் வஞ்சகம்

## தாராளமயக் கொள்கையின் 'சாதனை'ப் பட்டியல்

| வ.எண் | விபரம் | 1990-க்கு முன்பு | 1990-க்குப் பிறகு |
|---|---|---|---|
| 1. | உள்நாட்டு ஆண்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் | 6.8% | 3.9% |
| 2. | விவசாய உற்பத்தி ஆண்டு வளர்ச்சி விகிதம் | 5.9% | 2.3% |
| 3 | தொழில்துறை ஆண்டு வளர்ச்சி விகிதம் | 6.2% | 4.1% |
| 4. | மொத்த விலைக் குறியீட்டு எண் ஆண்டு சராசரி அதிகரிப்பு | 7.8% | 10.2% |
| 5. | ஓராண்டு காலத்தில் மொத்த விலை குறியீட்டு எண்ணின் வளர்ச்சி | 7.5% (செப்'90) | 8.7% (செப்'95) |
| 6. | வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் | 1.6% | 0.9% |
| 7. | வருமானப்-நிதிப் பற்றாக் குறை விகிதம் | 2.6% | 4.2% |
| 8. | வர்த்தகப் பற்றாக்குறை | ரூ.2832 கோடி | 8213 கோடி |
| 9. | அந்நியக் கடன் | 1,63,410 கோடி | 2,99,685 கோடி |

(பொருளாதார நிபுணரான அசோக் மித்ரா திரட்டிய ஆதாரங்களிலிருந்து சுருக்கித் தரப்பட்டுள்ளது)

www.padippakam.com

# அடிபணிந்தது அதிகார வர்க்கம்

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நேரு பூங்கா எனும் பகுதியில் தமிழக அரசின் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புக் காலனி உள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த அடுக்கு மாடிக் குடியிருப்பின் மேற் கூரைகள், மாடிப்படிகள், கைப்பிடிச் சுவர்கள், வீட்டுக் கதவுகள், சன்னல்கள் அனைத்தும் போதிய பராமரிப்பின்றி இடிந்தும் உடைந்தும், இக்குடியிருப்புகளில் வசித்து வரும் ஆயிரக்கணக்கான மக்களின் உயிருக்கும், உடமைக்கும் எந்த நேரத்திலும் கோரமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வண்ணம் பேரபாய நிலையில் உள்ளது. நேரு பூங்கா சுற்று வட்டப் பகுதியோ குப்பைகள் அகற்றப்படாமலும், கழிவு நீர் வெளியேற வழியின்றித் தேங்கிப் போய் குட்டைகள் நிறைந்ததாகவும், தொற்று நோய்கள் பரவும் வண்ணம் சுகாதாரக் கேடுகள் நிறைந்ததாகவும் உள்ளது. மாட்டுக் கொட்டிலை விடக் கேவலமானதான இந்நிலையை மாற்றக் கோரி அப்பகுதியில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மக்களைத் திரட்டிப் போராட முன் வந்தது.

முதலில் இப்பிரச்சினை தொடர்பாக அரசின் அலட்சியப் போக்கை அம்பலப்படுத்தி சுவரெழுத்து இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. அதையடுத்து பகுதியெங்கும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பின்னர் 5.12.95 அன்று பு.மா.இ.மு. தலைமையில் முப்பதிற்கும் மேலான பகுதி மக்கள் திரண்டு சென்று, "மராமத்து மற்றும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளக் கோரி" அதிகாரிகளிடம் மனு கொடுத்தனர். அதிகாரிகள் "பணமில்லை" எனக் கைவிரிக்கவே, "சாலை மறியலில் ஈடுபடுவோம்" என எச்சரித்துத் திரும்பினர்.

எச்சரித்தபடியே 12.12.95 அன்று காலையில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தைத் தொடங்கினர்.



இப்போராட்டத்தில் 250-க்கும் அதிகமான பகுதி பொது மக்கள் கலந்து கொண்டனர்; இவர்களுள் 100 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மறியல் தொடங்கிய அரை மணி நேரத்திற்குள், சாதாரண உடையில் இருந்த போலீசார் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கத் தொடங்கினர். இத்தாக்குதலில் முருகம்மாள், கௌரி என்ற இரு பெண்களுக்கும், நரசிம்மன், வெற்றி, ரங்கா என்ற இளைஞர்களுக்கும் இரத்தக் காயம் ஏற்பட்டது. ஆனாலும் பகுதி மக்கள் அச்சமின்றி மீண்டும் சாலைக்கு வந்து போலீசை எதிர்த்துக் கோஷமிட்டனர்.

இதன் பின் போலீசு அதிகாரிகள் மறியல் செய்தவர்களிடம் பல வழிகளில் சமாதானம் பேசினர். "தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு கோடி கோடியாய் பணமுள்ளது; எங்களுக்கு மட்டும் பணமில்லையா?" என எதிர்த்துக் கூறி போலீசை வாயடைக்கச் செய்தனர், பகுதி மக்கள். போலீசின் சமாதானத்தையும் மீறி மீண்டும் சாலையில் அமர்ந்து போக்குவரத்தை மறிக்கத் தொடங்கினர். ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அந்நெடுஞ்சாலையில் போக்குவரத்து இதனால் நின்று போனது. இதனிடையே போலீசே சென்று அதிகாரிகளை அழைத்து வந்தனர். அதிகாரிகள் குடியிருப்புப் பகுதியைச் சுற்றிப் பார்த்து வாக்குறுதி தந்த பின் சாலை மறியல் கைவிடப்பட்டது. சாலை மறியல் முடிந்த சில நாட்களுக்குள்ளாகவே, குடியிருப்புப் பகுதியினை மராமத்து செய்யும் பணியைத் தொடங்கிவிட்டது, அதிகார வர்க்கம். சரியான தலைமையின் கீழ் "சமரசமின்றிப் போராடினால் எதனையும் வெற்றி கொள்ளலாம்" என்ற படிப்பினையை இப்போராட்டத்தின் வாயிலாக உணரத் தலைப்பட்டுள்ளனர், பகுதி மக்கள்.

**தகவல்: பு.மா.இ.மு. - சென்னை.**

# மாவட்ட ஆட்சியரின் திமிரை அடக்கிய கல்லூரி மாணவர்கள்

விருத்தாசலம் நகருக்கு சட்ட மன்ற ஆய்வுக் குழுவினர் கடந்த 23.11.95 அன்று வந்திருந்தனர். இவர்களோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர். இதையறிந்து, விருத்தாசலம் அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கச் சென்றனர். இம்மனுவை வாங்க மறுத்த மாவட்ட ஆட்சியர், மதிய உணவுக்குப் பிறகு வந்து தரும்படி அதிகாரத் திமிருடன் மாணவர்களை விரட்டியடித்தார்.

கல்லூரி திரும்பிய மாணவப் பிரதிநிதிகள் அனைத்து மாணவர்களையும் அழைத்துக் கொண்டு, மாவட்ட ஆட்சியரின் அதிகாரத் திமிரைக் கண்டித்துச் சாலை மறியலில் ஈடுபட்டனர். பீதியடைந்த போலீசார், மாணவர்களிடம் நைச்சியமாகப் பேசி மீண்டும் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினர். இதை நிராகரித்த மாணவர்கள், மாவட்ட ஆட்சியர் இங்கு வந்து தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்தால்தான் சாலை மறியல் போராட்டத்தைக் கைவிடுவோம் என உறுதியாக நின்றனர். வேறு வழியின்றி, மாவட்ட ஆட்சியர் மாணவர்களிடம் வந்து தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மனுவைப் பெற்றுக் கொண்டார். முந்தைய ஆண்டுகளைப் போலின்றி இவ்வாண்டில் மாணவர்கள் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் போராட்டத்தை நடத்தவதற்கு புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி அடிப்படையாக விளங்குகின்றனர். ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டத்தை மாணவர்கள் வெற்றிகரமாக நடத்தியதையும், தற்போதைய போராட்ட உறுதியையும் கண்டு போலீசும் அதிகாரவர்க்கமும் அரண்டு போயுள்ளன.

**தகவல்: பு. மா.இ.மு: விருத்தாசலம்.**


படிப்பகம்

www.padippakam.com

## ரவுடிகளின் கொட்டத்தை அடக்கிய மாணவர்கள்

நாமக்கல் அரசு கலைக் கல்லூரியில் மாணவர் பேரவைத் தேர்தல் முடிந்து சில மாதங்கள் ஆகிவிட்ட போதிலும், தேர்தலில் தோல்வியடைந்த ம.தி.மு.க.வைச் சேர்ந்த பிரபு கோஷ்டி, மற்றவர்களைப் பழிவாங்குவது, அதிலும் தர்மபுரி மாவட்ட மாணவர்களை "ராக்கிங்" என்ற பெயரில் மிரட்டுவதும் அடிப்பதுமாக ரவுடித்தனத்தில் ஈடுபட்டு வந்தது. இக்கல்லூரியில் பயிலும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த ஜானகிராமன் என்ற மாணவர், "தேர்தலில் நான் யாருக்கும் ஓட்டுப் போடவில்லை" என்று கூறியதால், 12 பேர் கொண்ட பிரபு கோஷ்டி ரவுடிகள் அவரை அடித்துக் கேலி செய்தனர். அவர்களை எச்சரித்து விட்டு தனது அறைக்குத் திரும்பிய பிறகு, மீண்டும் உள்ளூர் ரௌடிகளைத் திரட்டிக் கொண்டு பிரபு தாக்க முற்பட்டான். பு.மா.இ.மு.வினர் அவர்களை விரட்டியடித்தனர்.

பின்னர் பு.மா.இ.மு.வினர் ஒரு குழுவாகச் சென்று பிரபு குடும்பத்தினரிடம் முறையிட்டனர். ஆனால் அவர்களோ பிரபுவின் ரவுடியிசத்தை அங்கீகரித்துத் திமிராகப் பேசினர். "மாணவர்களிடம் பிரபு மன்னிப்புக் கேட்காவிட்டால், உங்களையும் அம்பலப்படுத்தி நடவடிக்கையில் இறங்குவோம்" என்று பு.மா.இ.மு.வினர் எச்சரித்து விட்டு வந்தனர்.

பு.மா.இ.மு.வுக்கு ஆதரவாக அனைத்து மாணவர்களும் பிரபுவின் ரவுடித்தனத்தை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கத் தயாராகினர். மேலும், புவியியல் பிரிவு மாணவர்கள், கல்லூரி நிர்வாகத்திடம் ரவுடித்தனத்தை உடனடியாக முறியடிக்கக் கோரினர். அதைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாகம், ரவுடி பிரபுவை மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்க வைத்தது. பு.மா.இ.மு.வின் நடவடிக்கைகளால் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள ரவுடி பிரபு கோஷ்டி, இப்போது வாலைச் சுருட்டிக் கொண்டுள்ளது.

தகவல்: பு.மா.இ.மு. சேந்தமங்கலம்

## கள்ளச் சாரயம் விற்கும் 'மார்க்சிஸ்ட்'

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்திலுள்ள இருவேல்பட்டு கிராமத்தில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பான, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தில் (DYFI) முக்கிய பொறுப்பு வகிக்கும் பழனிகாந்த் என்பவன் கள்ளச் சாராயம் விற்கும் சமூக விரோதத் தொழிலை நெடுநாட்களாகவே செய்து வருகிறான். இவனைப் போலவே, ம.தி.மு.க.-வைச் சேர்ந்த சந்திரனும் இக்கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்று வந்தான். கடந்த அக்டோபரில் இச்சமூக விரோதிகளுக்கு எதிராக விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. இதனால் ஆத்திரமடைந்த சந்திரன் வி.வி.மு.வினரின் பிரச்சாரத் தட்டியைக் கொளுத்தினான். ஆனால் வி.வி.மு.வின் தொடர்ச்சியான பிரச்சார இயக்கத்தால் அம்பலப்பட்டு போன சந்திரன், மக்களின் எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியதும் வேறுவழியின்றி மக்களிடம் மன்னிப்பு கேட்டு, கள்ளச் சாராயம் விற்பதைத் தற்பொழுது நிறுத்திவிட்டான்.

ஆனால் மற்றொரு கள்ளச் சாராயப் பேர்வழியான பழனிகாந்த் தொடர்ந்து சாராயம் விற்று வந்ததோடு, இதனைத் தட்டிக் கேட்ட திருவெண்ணெய் நல்லூர் வட்டார வி.வி.மு. அமைப்பாளர் தோழர் ஏழுமலையை, கடந்த 14.11.95 அன்று தாக்கினான். தோழர் தாக்கப்பட்ட தகவல் அறிந்ததும் அவரது சொந்த ஊரான காரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கோபாவேசத்துடன் இருவேல்பட்டு கிராமத்திற்கு வரத் தொடங்கினர். இருவேல்பட்டு கிராம மக்களும் தோழர். ஏழுமலைக்கு ஆதரவளித்து, பழனிகாந்தின் ஈனச்செயலைக் கண்டித்தனர்.

மக்களின் கோபக்கனலை கண்டஞ்சி ஓடி ஒளிந்து கொண்ட பழனிகாந்த், தன்னிடம் விசுவாசம் கொண்ட போலீசை ஏவினான். போலீசு தோழர்களின் மீது பொய் வழக்கு ஒன்றைப் போட்டு, ஆறுபேரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. கள்ளச் சாராய பேர்வழிக்குத் துணை போகும் போலீசைக் கண்டித்தும், சமூக விரோதிகளின் கூடாரமாக 'மார்க்சிஸ்ட்' கட்சி மாறி வருவதை அம்பலப்படுத்தியும் வி.வி.மு. சார்பாக சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தகவல்; வி.வி.மு., காரப்பட்டு.

## பகுத்தறிவுக்குப் பகையாளிகள் பார்ப்பனக் கைக்கூலிகள்

இந்தியா முழுவதும் பிள்ளையார் பால் குடித்த பித்தலாட்டத்தையும், இம்மூடப் பிரச்சாரத்தை விஞ்ஞானிகள் அறிவியல் பூர்வமாக அம்பலப்படுத்தியதையும் விளக்கி, சென்னை மையத் தந்தி அலுவலகத்தில் (CTO) ஊழியர்களின் "விழிப்புணர்வுக்காகத் தொழிலாளர் பகுத்தறிவு" மன்றத்தைச் சேர்ந்த தோழர் இளங்கோ, பிரசுரம் ஒன்றை விநியோகித்தார். இதைப் பொறுக்காத போலிக் கம்யூனிஸ்டுகளின் (NFTE) உறுப்பு சங்கமான தந்தி ஊழியர் மூன்றாம் பிரிவு சங்கத்தின் மாநிலச் செயலாளரான கோபால கிருஷ்ணன், "பெரும்பான்மை மதத்தினரைப் புண்படுத்தியதாக" பார்ப்பன ஊழியர்கள் சிலரிடம் கையெழுத்து வாங்கி நிர்வாகத்திடம் கொடுத்து, தோழர் இளங்கோ மீது நடவடிக்கை எடுக்குமாறு காட்டிக் கொடுத்துள்ளார். இதே போல, அண்மையில் சூரிய கிரகணம் ஏற்பட்டதையொட்டி, பகுத்தறிவு மன்றத்தினர் அறிவியல் விளக்கப் படங்களுடன் தந்தி அலுவலகத்தில் எழுதி வைத்திருந்த தட்டியைத் திருடி, திருவாளர் கோபால கிருஷ்ணன் நிர்வாகத்திடம் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். கடைந்தெடுத்த கைக்கூலித்தனமும், பார்ப்பன வர்ணாசிரம வெறியும் கொண்ட இந்தப் பூணூலிஸ்டுகள் தான் தொழிலாளர்களின் விடுதலைக்குப் பாடுபடும் தலைவர்களாம்! வெட்கக்கேடு!

தகவல்: தொழிலாளர் பகுத்தறிவு மன்றம்


வெளிவந்துவிட்டது!
மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்
5-வது பாடல் ஒலிப்பேழை

அண்ணன் வர்றாரு...

கிரிமினல்மயமான
ஓட்டுச்சீட்டு அரசியலின்
முகத்திரையை
உரித்தெடுக்கும்
பாடல்கள்.

விலை: ரூ.80.00

கிடைக்குமிடம்:

தமிழ்மணி,
உதயசூரியன் தேநீர் விடுதி,
காந்திபுரம், தில்லைநகர்
5-வது குறுக்குத்தெரு, திருச்சி - 18.



படிப்பகம்

www.padippakam.com

11-ம் பக்க தொடர்ச்சி

## பிற சாதிப் பிரமுகர்களின் ஒதுங்கும் போக்கு

''தென் மாவட்டங்களில் ஆங்காங்கே கணிசமாக வாழும் நாடார், கோனார், சைவப் பிள்ளைமார், நாயுடு மற்றும் ஏனைய பிரிவு மக்கள் என்ன நினைக்கிறார்கள்? வணிக வர்க்கமாக நிலைபெற்றுவிட்ட நாடார்களுடன் தேவர்கள் போட்டியிட்டபோது எழுந்த சச்சரவுகள் இன்று இல்லை. தேவர் சாதி ஆதிக்கத்தைக் குறை கூறும் அனைத்து சாதிப்பிரிவினரும் கலவரத்திற்காக யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. தென்காசி அருகே மேலகரத்தில் பிற்படுத்தப்பட்ட மேல் சாதியினரின் கடைகள் சூறையாடப்பட்டு, வீடுகள் தாக்கப்பட்டவுடன் அனைத்துச் சாதியினரும் ஒன்று கூடி தாழ்த்தப்பட்டவர்கள் மீது சமூகப் புறக்கணிப்பு செய்ய முடிவெடுத்தனர். அதே சமயம் பள்ளர்கள் கிராமங்களைப் போலீசு சூறையாடிய போதும், பல அப்பாவிகளைக் கைது செய்த போதும், இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்ட போதும் இவர்கள் சிவனே என்று இருந்ததை கவனிக்க வேண்டும்.

ஒரு தரப்பினரை மட்டும் குற்றம் சாட்டினால் எதிர்கால ஒற்றுமைக்கு இடையூறு செய்யும். 47-க்குப் பிறகு பிள்ளைமார்கள் பெரு நகரங்களுக்குச் சென்று விட்டார்கள். இங்கே நாங்கள் ஓகோ என்று இல்லை. தாமிரபரணியில் குளித்து, சிவன் கோயிலில் சாமி கும்பிட்டு வயல்சோறு சாப்பிடும் - அமைதியான வாழ்க்கையை நெல்லை மக்கள் விரும்புகிறார்கள்.

**நெல்லை அருகே தனியார் நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர், சைவப் பிள்ளைமார்.**

☆ 20 வருடத்திற்கு முன்பு சாதிய ஒடுக்குமுறை இருந்தது உண்மை. இப்போது சரிசமமாக வாழ்கிறோம். தாழ்த்தப்பட்டவர்களோடு கலப்புத் திருமணம் என்பது பிரச்சினைக்குரிய ஒன்று. தனக்குக் கீழே உள்ள சாதியிடம் மணஉறவு கொள்ள யாரும் விரும்ப மாட்டார்கள்.

**பால்ராஜ் - ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர், நாயுடு, மலைப்பட்டி கிராமம்.**

☆ 40 வருடங்களுக்கு முன் ரெட்டியார் பட்டி பள்ளிக்கூடத்தில் கையேந்தி தண்ணீர் குடித்த நானும், என் சமூகமும் முன்னேறக் காரணம் பொறுமை. தேவர்களும், பள்ளர்களும் மோதலைக் கைவிட்டு, அவர்களது தொழில் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



**பண்டாரம் நாடார், சிறு வியாபாரி, தச்சநல்லூர்**



☆ தென் மாவட்டங்களில் சாதிய உணர்வு அதிகம். அம்பேத்கர், பசும்பொன் தேவர், காமராசர் சாதியத் தலைவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். வணிக வைசிய சமுதாய மாநாட்டில் காந்தியையும், கண்ணகியையும் வியாபாரிகளாகச் சித்தரித்து உறவு கொண்டாடுகிறார்கள். விசுவகர்மா, சமுதாயம் ஜெயில்சிங்கை ஆசாரியென்று சொந்தம் கொண்டாடுகிறது. காமராசர் சிலையைத் திறக்க சரத்குமார் அழைக்கப்படுவது ஏன்? திருமண அழைப்பிதழில் சாதித் தலைவர்கள் படம் போடக் கூடாது. சாதி ஒழிய கலப்புத் திருமணம் அவசியம். எங்களது வாரிசுகளுக்கு நாங்களாகவே கீழ்சாதியுடன் மண உறவு கொள்ள மாட்டோம். அவர்களாகவே விரும்பினால் தடுக்க மாட்டோம்''.

**பல சாதியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.**

எதிர்க்க வக்கற்றுப் போனார்கள் என்பது வரலாறு.

### ஒரு மாதிரி தேவர் கிராமம்: சங்கரன் கோவில் அருகே மேலநீலித நல்லூர்

அக்ரகாரத்தில் 7 பார்ப்பனர் குடும்பங்கள் மட்டும் உள்ளது. தேவர் தலைக்கட்டு 300, கோனார் குடும்பங்கள் 50, பள்ளர்கள் குடும்பம் 200, பறையர்கள் 20, சக்கிலியர் 1. பூக்கள், காய்கறிகள் விளையும் வளமான நஞ்சை நிலம் 400 ஏக்கர் உள்ளது. பெரும்பான்மை நிலங்கள் தேவர், கோனார் குடும்பங்களுக்குரியது. நிலவுடமை 5 ஏக்கரில் இருந்து 1 ஏக்கர் வரை; சரிபாதி தேவர்கள் குத்தகை விவசாயிகளாக உள்ளனர்.

20 வருடங்களுக்கு முன்பு வரை ''திருட்டு'', ''வழிப்பறி'' என வாழ்ந்து வந்த தேவர் இனத்தவர் பலரும் இன்று அவற்றைக் கைவிட்டு, விவசாயம் செய்கிறார்கள். படித்தவர்கள், அரசு வேலை வாய்ப்பு பெற்றவர்கள், வெளியூர் சென்றவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர்.

தாழ்த்தப்பட்ட பிரிவினரில் பள்ளர்கள் அனைவரும் விவசாயக் கூலிகள். பறையர்கள் அடிமைத் தொழில்களும், சக்கிலியர் குடும்பம் தோட்டித் தொழிலும் செய்கின்றனர்.

காலனிக்கென்று தனி டீக்கடையும், தனிக் கோவிலும் உள்ளன.

இக்கிராமத்தில் தேவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் உறவு எப்படியிருக்கும் என்று விளக்கத் தேவையில்லை. இனி கலவரம் தோன்றுகின்ற பின்னணிகளை இவற்றுடன் இணைத்தால் எதற்காக நடக்கிறது கலவரம் என்பது புரியும். வீரசிகாமணி, கங்கைகொண்டான், சங்கரன் கோவில் மூன்று இடங்களிலும் மாணவர்கள் மத்தியில்தான் முதலில் சச்சரவு தோன்றியது. தனி டீ கிளாஸ் உள்ளிட்ட தீண்டாமைக் கொடுமைகளோடு அடக்கப்பட்டு வாழும் தாழ்த்தப்பட்டவர்களை ஆதிக்கம் செய்து பழகிய தேவர் கிராம இளைஞர்கள் படிப்பதற்கோ, வேலை செய்வதற்கோ நகரங்களுக்கும் வேறு ஊர்களுக்கு செல்கிறார்கள்.

அங்கு தாழ்த்தப்பட்டவர்கள் தேவர்கள் உள்ளிட்ட அனைத்துச் சாதியினரோடும் சமமாக வாழ்கிறார்கள். அடிமைத்தனம் என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்று. படிக்க வந்த கிராமத்துத் தேவர் மாணவன் தனது மேல் சாதி கௌரவத்தை ஏற்குமாறு நகரத்துத் தாழ்த்தப்பட்ட மாணவனை வற்புறுத்துகிறான்; இழிவாகப் பேசி திட்டுகிறான். பின்பு அடிதடி, வெட்டுக்குத்து என்ற அளவுக்கும் செல்கிறது. எளிதில் உணர்ச்சி வசப்படும் மாணவப்பருவம் உடனடி நடவடிக்கையில் இறங்குகிறது.

நெல்லை நகரக் கல்லூரிகளான சேவியர் கல்லூரி, ஜான்ஸ் கல்லூரி இரண்டிலும் ஒவ்வொரு வருடமும் கல்லூரி ஆண்டு விழா நடக்கிறதோ இல்லையோ தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், தேவர் சாதி தலைமையிலான பிற்படுத்


படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் போலீசு அடக்குமுறை

நவம்பர் மாத இறுதியில் கொடியன்குளத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த செல்லையா என்ற தாழ்த்தப்பட்டவர் கொலையுண்டவுடன் இரண்டாவது சுற்றுக் கலவரம் ஆரம்பித்தது. இருதரப்பிலும் ஒரு வாரத்திற்குள் 15 பேர் கொல்லப்பட்டனர்.

எல்லா இடங்களிலும் முதல் தாக்குதலைத் தேவர் சாதியினர் மேற்கொண்டதையும், தேவர் சாதி மக்களில் முன்னின்று நடத்தும் வெறியர்களைக் கைது செய்ய போலீசு அஞ்சியதும் கலவரம் தொடர்ந்ததற்கு முக்கியக் காரணங்களாகும். கீழ்கண்ட சம்பவங்கள், மக்களின் கருத்துகள் ஆதிக்க சாதிவெறிக்கு அப்பாற்பட்ட நிறுவனமாக போலீசு இருக்க முடியாது என்பதைக் காட்டுகிறது.

□ நெல்லை அருகே துறையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அந்தோனி (வயது 60, தாழ்த்தப்பட்டவர்) அருகிலுள்ள கல்குவாரியில் காவலாளியாகப் பணியாற்றி



வந்தார். டிச.1-ம் தேதியன்று இவர் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து, கயத்தாறிலிருந்து வந்த தனியார் பேருந்திலிருந்த தேவர் சமூகத்தைச் சார்ந்த செல்வராஜு (37), சங்கரன் (32) - இருவரும் கொல்லப்பட்டனர்.

இதன்பின் துறையூர் கிராமத்தைப் போலீசு சுற்றி வளைத்ததும், "என் மகனை வீட்டினுள் ஒளித்து வைத்தேன். அவனைக் கதவை உடைத்து அடித்து இழுத்துச் சென்றார்கள். தடுக்க முற்பட்ட எனக்கும் அடி கிடைத்தது. பின்னர் சர்ச்சில் கூடிய பெரியவர்கள், பெண்கள் அனைவரையும் அடித்து மொத்தம் 11 பேரைக் கைது செய்தார்கள். தேவமாருக்கும் பயப்படணும், போலீசுக்கும் பயப்படணும்; எங்க பாட்டி தாத்தா எல்லாம் அடிமையாக இருந்தவங்க எங்க புள்ளைங்க இருக்குமா?''

**- ஆக்னஸி (40. தாழ்த்தப்பட்ட பெண்) துறையூர்.**

□ டிச.3 அன்று சிதம்பரனார் மாவட்டம் அயிரவன் பட்டியில் பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்த கிராம நிர்வாக அதிகாரி குருசாமி (வயது 52/தேவர்) வெட்டிக் கொல்லப்படுகிறார். சம்பவ இடத்திற்கு உடன் வந்த போலீசு, கொலையாளிகள் கிழக்குப் பக்கமாக சென்றனர் என்ற செய்தியை வைத்து அத்திசையில் உள்ள தாழ்த்தப்பட்டவர் அதிகம் வாழும் கிராமத்தில் அதிரடியாய் இறங்கியது.

"4 வேன்களில் கிராமத்தைச் சுற்றி வளைத்துப் போலீசு நெருங்கும்போது அலட்சியமா இருந்தோம். இறங்கி அனைவரையும் அடிக்க முற்பட்ட போது இளைஞர்கள் அனைவரும் ஓடினோம். இல்லையென்றால் கொலை வழக்குகளில் மாட்டி விடுவார்கள். போலீசார் கையில் ஆணி பதித்த கட்டை, கண்டங்கோடாரி போன்ற ஆயுதங்களை வைத்திருந்தார்கள். கையில் கிடைத்த 7 பேரை கைது செய்தது; தடுக்க முற்பட்ட பெண்களுக்கு வயது வித்தியாசம் இல்லாமல் அடி கிடைத்தது. சீருடை அணியாத வீரபாண்டியபுரம் போலீஸ்காரர்கள் இருவர், "எங்க அண்ணனை (கிராம அதிகாரி குருசாமி) வெட்டும் போது நல்லா இருந்ததா? உங்க பொம்பளை ஆட்களை அடிக்கும் போது கூப்பாடு போடுகிறீர்களே'' - என்று சொல்லிக் கொண்டே கடுமையாக அடித்தனர். 16 வயது பாலமுருகனுக்கு காலில் கோடாரி வெட்டு விழுந்தது. 14 வயது சிறுமி ஜோதிக்கு தலையில் கல்லடிபட்டுக் காய



போலீசால் தாக்கப்பட்ட பாலமுருகன்

மானது. கைதானவர்களில் மாணவர்களும் உண்டு''

**— முனியசாமி, கதிர்வேல் மற்றும் இளைஞர்கள், நாட்டாமை செல்லத்துரை, மாரியப்பன் மற்றும் ஊர் பெரியவர்கள், பெண்கள்**

□ நவ.18-ம் தேதி புல்லறுக்கப் போகும் போது கும்பலாக வந்த போலீசு 14 பேரைக் கைது செய்தது. தடுக்கப் போன பொம்பளைங்களை இழிவாகப் பேசி, "கொடியன்குளம் மாதிரி அடி வேணுமா?'' என்று மிரட்டினார்கள். "எங்க ஆம்பளைங்களை பிடிச்சுட்டு போனால் பொம்பளைங்க நாங்க என்ன செய்ய முடியும்? தின



மும் பயமா இருக்கு, கொடியன்குளம் மாதிரி செஞ்சுடுவாங்களோன்னு''

**கருப்பாயி அம்மாள், சிந்தாமணி**

□ "பள்ளர்களை நிற்கவைத்தும், தேவர்களைப் பெஞ்சில் உட்கார வைத்தும் விசாரணை நடந்தது; பல இடங்களில் என் சாதியினரைப் போலீசு அடிப்பதைப் பார்த்து விட்டு சும்மாதான் இருக்கிறேன். என்ன செய்வது?''

**தாழ்த்தப்பட்ட போலீசுக்காரர், நெல்லை மாவட்டம்.**

தப்பட்ட மாணவர்களுக்குமிடையே சண்டை கண்டிப்பாக நடக்கிறது.

சங்கரன் கோவில் அருகே நடுவக்குறிச்சி ஊரைச் சேர்ந்த எஸ்.சி. இளைஞர், வெளியூர் சென்று வேலை பார்த்தவர்; ஊர் திரும்பியதும், எதிரில் கண்ட ஒரு தேவர் சாதிப் பெண்ணை, "அக்கா'' என்று அழைக்க, அந்த பெண்ணின் உறவினர்கள் அந்த இளைஞனை அடித்து கையை உடைத்தனர். "அந்த இளைஞனுக்கு நான்தான் சிகிச்சையளித்தேன். இந்தப் பின்னணியில் வளரும் தேவர் சாதி இளைஞன் எங்கு சென்றாலும் எஸ்.சி.யோடு சண்டை போடுவான்'' என்கிறார் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த அரசு மருத்துவர் ஒருவர்.

இப்படித்தான் தன்னுடைய கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்களை ஆதிக்கம் செய்து பழகிய பன்னீர் செல்வம் (கொடியன்குளத்தில் ஆட்டம் போட்ட மாவட்ட ஆட்சியாளர்) போன்ற அரசு அதிகாரிகள், போலீசு அதிகாரிகள் தங்கள் கைகளிலிருக்கும் அரசு அதிகாரத்தின் மூலமும் ஆதிக்கம் செய்ய விரும்புகிறார்கள்.

"நான் களக்காட்டில் பிறந்து வளர்ந்ததினால் என்னிடம் தேவர்களுக்குரிய சாதிய உணர்வு இல்லை. மாறாக வள்ளியூர் அல்லது நாங்குநேரியில் பிறந்து வளர்ந்திருந்தால், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அத்தகைய சாதிய உணர்வுடனே வளர்ந்திருப்பேன்'' என்கிறார் சிதம்பரனார் மாவட்டத்தில் அரசு வேலை பார்க்கும் இளைஞர்.

"எங்கள் ஊர் தேவர்கள் சாதிய வெறி இல்லாதவர்கள். ஆனால் இவர்களோடு மணஉறவு கொண்டுள்ள கயத்தாறு, ஓனான்குளம் போன்ற பகுதிகளில் இருந்து வரும் தேவர்களால்தான் சண்டை வருகிறது''.

**தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், மேலகரம்.**

**● இராமநாதன்**

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி......

# கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா?

ஸ்டாலின் காலத்திய சோவியத் ஒன்றியத்துக்கும், மாவோ காலத்திய செஞ்சீனத்திற்கும் பயணம் செய்து வந்த மேலை மற்றும் கீழை நாடுகளின் அறிஞர்கள், சமூக சேவையாளர்கள், ஜனநாயக அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் அனைவரும் பிரமித்துப்போய் மூன்று முக்கிய அம்சங்களைத் தவறாது குறிப்பிட்டனர்.

★ கம்யூனிச - சோசலிச நாடுகளில் விபச்சாரம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. பெண்கள் அனைவருக்கும் பொருளாதார சுதந்திரம், சுயசார்பைப் பெறும் வகையில் வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது; ஆண் - பெண்களின் சம உரிமையைப் போற்றும் ஒழுக்கம், பண்பாடு போற்றப்படுகிறது. குடும்ப உறவுகளிலும், குழந்தைகளைப் பேணுவதிலும் புதிய, வரவேற்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

★ கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கள்ளச் சந்தை போன்ற சமூக விரோத பொருளாதாரக் குற்றங்கள் அற்ப அளவுக்குக் குறைந்துவிட்டன. அவ்வளவு பெரிய நாடுகளில் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு சிறையில் இருப்பவர்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவுதான். வீடுகளையோ, கடைகளையோ அங்கே பூண்டிக்கொண்டு செல்வதில்லை. காரணம் அங்கே திருட்டு பயம் கிடையாது. உணவு, உடை, இருப்பிடம், வேலை வாய்ப்பு ஆகியவை அனைவருக்கும் கிடைப்பதால் அங்கே கிரிமினல் குற்றங்களுக்கான அடிப்படை இல்லாமல் போய் விட்டது.

★ ஒரு குறுகிய காலத்திலேயே விவசாயம், தொழில், அறிவியல் - தொழில் நுட்பம், மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது ஆகியவற்றில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. உழைப்பும் சமூக சேவையும் மதிக்கப்பட்டன; கல்வி - கலாச்சாரம், நாகரிகம், நல்லொழுக்கம் ஆகியவற்றிலும் ஒரு புதிய வளர்ச்சி எட்டப்பட்டது. உலக மக்களுக்கும் நாடுகளுக்கும் நல்ல முன்னுதாரணமாகத் திகழ்ந்தன சோசலிச நாடுகள்.

ஆனால் ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் இதை ஏற்கவில்லை. அந்நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் அடங்கிய பெரிய சர்வாதிகாரக் கும்பல் ஆதிக்கம் சுரண்டல்தான் நிலவுகிறது; முன்னேற்றம் என்பதெல்லாம் போலியான புள்ளி விவரங்கள் அடிப்படையிலானவை; தலைவர்கள், பிரமுகர்கள் இரகசியமான, ஆடம்பர வக்கிர வாழ்வு வாழ்கின்றனர்; உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பண்ணைகள், மாளிகைகள், முதலீடுகள் என்று சொத்துச் சேர்த்துள்ளனர்; அதேசமயம் தனி மனித சுதந்திரம் - ஜனநாயகம் பறிக்கப்பட்டு சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்று வதந்திகளைப் பரப்பி வந்தனர். சோல்செனித்ஸ் சென், வாங் மிங் போன்ற கைக்கூலிகள், துரோகிகள் இத்தகைய அவதூறுகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர்.

ஏகாதிபத்திய நிறுவனங்களின் சக்தி வாய்ந்த மக்கள் பெருந்திரள் செய்தி தொடர்புச் சாதனங்களால் இந்த அவதூறுகள் தொடர்ந்து வருகின்றன. ஆனால் முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவம் முற்றாக நிறுவப்பட்ட பிறகு எழுந்துள்ள உண்மை நிலை என்ன? உழைக்கும் மக்கள் கூலி அடிமைகளாகவும் பெண்கள் சமூக அடிமைகளாகவும் வெகு விரைவிலேயே மாற்றப்பட்டனர். நகரங்களில் எல்லாம் ''காசினோ'' எனப்படும் சூதாட்ட விடுதிகள்; உழைக்கும் மக்கள் ஓய்வுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த சுற்றுலாத் தளங்களும், பழம் அரண்மனைகளும், நவீன மாளிகைகளும் நட்சத்திர விடுதிகளாக - காமக் களிவெறியாட்ட அரங்குகளாகவும் மாறிவிட்டன; விபச்சார, கிரிமினல் மஃபியா கும்பல்களின் ஆதிக்கமும் எங்கும் பரவி விட்டன.

> இப்போது மேற்குலகை ஆட்டிப் படைக்கும் உல்லாச வாழ்க்கை எனப்படும் நச்சுக் கலாச்சாரம் முன்னாளைய சோசலிச நாடுகளிலும் வேகமாகப் பரவி வருகிறது. போதை மருந்து, ஓரினச் சேர்க்கை, காம வெறியாட்டம் போடும் கும்பல் பாலுறவு இவற்றின் விளைவாக ''எயிட்ஸ்'' போன்ற சாவு நோய்கள் காய்ச்சி ஊற்றிய ஈயத்தைப் போல இச் சமுதாயங்களையும் பற்றிக் கொண்டு விட்டது.

மேற்குலகைப் போலவே முன்னாள் சோசலிச நாடுகள் ஒழுக்கமும், பண்பாடும், மிக்க நாகரிகமும் உள்ள மனிதர்கள் வாழத் தகுதியற்றவையாக மாறிவிட்டன.

அமெரிக்காவின், வாஷிங்டன் நகரில் உள்ள பல்கலைக்கழக ''நீதி, சட்டம், சமூகம்'' என்ற துறையின் பேராசிரியர் லூயிஸ் ஐ. ஷெல்லி ''ஜனநாயக மயம்'' என்ற ரஷ்யப் பத்திரிகையின் ஆசிரியர். இவர் சொல்கிறார்:முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் புதிய குடியரசுகள் அனைத்திலும் அரசாங்கங்களின் எல்லா மட்டங்களிலும் அமைப்பு ரீதியில் திரண்டுள்ள குற்றக் கும்பல்கள் ஊடுருவிவிட்டன. இவ்வளவு தூரம் சமூகத்தில் அவை பரவிவிட்டதால் இனிமேலும் அவை சாதாரண குற்றப் பிரச்சினையாகக் கருத முடியாது. சோவியத் ஒன்றியம் சிதைந்து உருவான புது அரசுகளின் எதிர்கால வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றும் ஒரு விஷயமாகச் சொல்வதுதான் சரியாகும். மேலும், ஒரு சர்வதேச மற்றும் உள்நாட்டு விஷயம் என்கிற முறையில் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களின் விளைவாக எழுந்துள்ள பாதிப்புகள் ஏற்கனவே கிழக்கு ஐரோப்பிய வட்டங்களில் மட்டுமல்ல மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஒரு பகுதி ஆசியாவிலும் கூடத் தெரிகிறது.''

''அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்கள் அரசின் செயல்பாடுகள் பலவற்றையும் எடுத்துக் கொண்டு விட்டன. தொழில் வர்த்தகங்களுக்குப் பாதுகாப்பு, குடி மக்களுக்கு வேலை வாய்ப்பு, தகராறுகளைத் தீர்த்து வைப்பது போன்றவை அரசு செய்ய வேண்டிய சேவைகள் - பணிகள் என்று குடிகள் எதிர்பார்க்கிறார்கள்; ஆனால் அவற்றை ரசிய மற்றும் பிற 'காமன்வெல்த்' நாடுகளின் ஆளும் மேட்டுக் குடிக்காக முன்னாள் கட்சி செல்லப் பிள்ளைகளும் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களும் அடங்கிய கூட்டணி இப்போது தருகிறது. அரசாங்கத்தின் சட்ட அமலாக்கப் படைகளின் இடத்தை அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்படும் தனியார் பாதுகாப்புப் படைகள் பிடித்துக் கொண்டு விட்டன. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சட்ட அமலாக்கப் படையினர் முறையான ஒழுங்கு விதிகள் எதுவும் இல்லாமல் செயல்பட்டு வருகின்றனர்'' என்று கடந்த ஆண்டு கணித்தார்.

''உலக ஆலோசனை சேவைகள்'' என்ற அமைப்பின் தலைவர் ரென்ஸ்லேயர் டபிள்யூ. லீ III. இன் கணிப்புப்படி, ஒரு இலட்சத்துக்கும் மேலான நபர்களைக் கொண்ட 5500 கிரிமினல் கும்பல்கள் ருசியாவில் மட்டும் செயல்படுகின்றன; அவை மாமூல் வசூலிப்பது,

www.padippakam.com

போதை மருந்து கடத்தல் - வியாபாரம், வங்கி மோசடி, ஆயுதக் கடத்தல் - வியாபாரம், எண்ணெய் - உலோகங்கள் கள்ளக் கடத்தல், இவற்றைவிட முக்கியமாக அணு உலைகளுக்குத் தேவையான மூலக்கூறுகளும் தளவாடங்களும் கடத்தல் போன்ற கடும் குற்றங்கள் புரிந்து வருகின்றனர். இவை சராசரி 70 முதல் 300 பேர் வரையிலான உறுப்பினர்களைக் கொண்டவை; தமக்குள் ஒரு கூட்டமைப்பையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

அமெரிக்கா செனட் குழு ஓராண்டுக்கு முன்பு நடத்திய விசாரணையின் போது ருசிய முதல் துணை உள்துறை அமைச்சர் மிகையில் யேகோரோவ் அளித்த விவரத்தின்படி 150 முதல் 200 ருசியக் கிரிமினல் கும்பல்கள் சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. அவை முன்னாள் சோவியத் அரசுகளில் மட்டுமல்ல மேற்கு நாடுகளிலும் தேர்தல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளன. இந்தக் கூட்டமைப்புகள் இஸ்ரேலில் உள்ள டெல்அவிவ் மற்றும் ஹைஃபாவைத் தலைமையகமாகக் கொண்டு அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா, நியூயார்க், லாஸ்ஏஞ்செல்ஸ் போன்ற பெரு நகரங்களில் தீவிரமாகச் செயல்படுகின்றன. ருசியக் குற்றக் கும்பல்களில் 24 அமெரிக்காவிலும், 47 ஜெர்மனியிலும், 60 இத்தாலியிலும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

ருசிய நிதி அமைப்புக்குள் புகுந்து கட்டுப்படுத்த முயன்ற 35 பெரும் வங்கியாளர்களைக் குற்றக் கும்பல்கள் தீர்த்துக் கட்டி விட்டன என்று அதே விசாரணையின் போது அமெரிக்க உளவுத்துறை இயக்குநர் லூயிஸ் பிரீ சாட்சி சொன்னார். ருசிய உள்துறையின் புள்ளிவிவரப்படி 1993-இல் மட்டும் 28 இலட்சம் குற்றங்கள் நடந்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய பத்தாண்டுகளை விட இது 200 சதவீதம் அதிகமாகும். அவற்றில் 30,000 கொலைக் குற்றங்கள்; அவை அதற்கு முந்தைய ஆண்டைவிட 27 சதவீதம் கூடுதலானவை. ருசியாவில் நடந்த தனியார்மயமாக்கலைப் பயன்படுத்திக் கொண்டு 40,000 தொழில்-வர்த்தக நிறுவனங்களை அமைப்புரீதியில் திரண்ட கிரிமினல் குற்றக் கும்பல்கள் கைப்பற்றிக் கட்டுப்படுத்துகின்றன என்கிறது ருசிய அறிவியல் கழகத்தின் சர்வதேசப் பொருளாதார மற்றும் அரசியல் ஆய்வுகளுக்கான நிறுவன இயக்குநர் ஸ்வெட்லானா டி. கிளிங்கினாவின் ஆராய்ச்சி நூல். இந்தக் கிரிமினல் குற்றக் கும்பல்கள் முன்னாள் சோசலிச நாடுகளுக்கு மட்டுமல்ல; பல வெளிநாடுகளுக்கும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி பெரிய பெரிய வலைப்பின்னல்களை உருவாக்கி இயங்குவது உலக நாடுகள் அனைத்தின் சமூகங்களுக்கும் பயபீதியை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் மேற்கு வங்கம் புருலியா மாவட்டக் கிராமங்களில் 35 கோடி ரூபாய் மதிப்புள்ள நவீன ஆயுதங்களை விமானத்தில் இருந்து வீசியது இத்தகைய குற்றக் கும்பலின் செயல்தான். நியூசிலாந்து, இங்கிலாந்து நாட்டுக் கிரிமினல்கள் இருவரோடு முன்னாள் சோவியத்தான லாட்விய ருசியர்கள் ஐவரும் சிக்கியுள்ளனர். இந்த ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ள கிரிமினல்களின் வலைப்பின்னல் மேற்கே இங்கிலாந்து முதல் பாகிஸ்தான் - இந்தியா - தாய்லாந்து - ஹாங்காங் வழியே கிழக்கே நியூசிலாந்து எனப் பரவியுள்ளது பலரைத் திடுக்கிடச் செய்கிறது.

> கம்யூனிசத்தின் பிடியிலிருந்து அந்நாடுகளை விடுவித்து சுதந்திரமான, ஜனநாயக சமுதாயமாக மாற்றப் போவதே தமது இலட்சியம் என்றார்கள். இறுதியில் கண்டது அரசியல் அதிகாரம், விவசாயம் - தொழில் - வியாபாரம், பண்பாடு - நாகரிகம் ஆகிய சமுதாயத்தின் அனைத்து வாழ்விலும் கிரிமினல் குற்றக் கும்பல்களின் ஆதிக்கத்தைத் தானே!

ஏகாதிபத்திய சட்டபூர்வ உலகத்துக்குப் பெரும் சவாலாக வளர்ந்துள்ள இத்தகைய குற்றக் கும்பல்களை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள்தாம் அவர்களால் முதலில் பழிவாங்கப்படுகின்றனர். 1993-ஆம் ஆண்டு மட்டும் 30 ருஷ்யப் பத்திரிகையாளர்கள் இவர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ''ஜெர்மனியில் நிலை கொண்டிருந்த ருசிய இராணுவ அதிகாரிகள் நவீன - உயர்ரக ஆயுதம் கடத்துவது'' பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த ''மாஸ்கோவ்ஸ்கி கம்யோமேட்ஸ்'' என்ற ஏட்டின் பத்திரிகையாளர் திமித்திரி குண்டு வைத்துச் சிதைக்கப்பட்டார். ''யார், யார்?'' என்கிற மாஸ்கோ பத்திரிகையின் ஆசிரியரும், நாடாளுமன்றப் பிரதிநிதியுமான ஆந்திரேய் ஆஸ்தேரிஸ் 250 குற்றக் கும்பல்களின் தலைவர்கள் பற்றிய விவரங்களை எழுதி வெளியிட்டதற்காகப் படுகொலை செய்யப்பட்டார். இறுதியாக, ருசியப் பொதுத் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் விளாடிஸ்லாவ் லிஸ்டியேவ் அவர் வீட்டின் முன்பாகவே கிரிமினல் குற்றக் கும்பலினால் சுட்டுக் கொல்லப்பட்டது ஏகாதிபத்திய உலகையே அதிர்ச்சியடையச் செய்தது; குறுகிய காலத்தில் மிகமிகப் பிரபலமடைந்த லிஸ்டியேவ், வானொளி மூலம் விளம்பரம் செய்யும் பணம் முழுவதையும் கிரிமினல் குற்றக் கும்பல்கள் சுருட்டிக் கொள்வதை அவர் தடுக்க முயன்றதுதான் கொலைக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது.

ரசிய சிறுவனை சிறுமியாக்கி விபச்சாரத்திற்கு ஈடுபடுத்தும் தரகன்



''ஜனநாயக மயம்'' என்ற ருஷ்யப் பத்திரிக்கை ''அமைப்பு ரீதியில் திரண்டுள்ள குற்றக் கும்பல்கள்'' என்கிற தனது சிறப்பிதழில் பின்வருமாறு எழுதியுள்ளது: ''சமுதாயத்தின் அரசியல், சமூக வளர்ச்சியில் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களால் பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன; தனியார்மயமாக்கலுக்கும் அந்தக் குற்றக் கும்பல்களுக்கும் ஒரு நெருக்கமான பிணைப்பு இருக்கிறது. புதிதாக உருவாகும் மூலதனம் மற்றும் வங்கித் தொழில்கள் கிரிமினல் மயமாவது உதயமாகும் முதலாளித்துவத்துக்கும் தொழிலாளர் உரிமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வருபவர்களுக்கு அமைப்பு ரீதியில் திரண்ட இந்தக் குற்றக் கும்பல்கள் இராணுவம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் பாதிப்பு ஏற்படுத்துவதாக உள்ளன. அவை சட்ட மரபுகள் மற்றும் குடிமக்களின் மனித உரிமைகளையும் பாதிக்கின்றன. சர்வதேச ரீதியிலும் இவை பாதிப்பு ஏற்படுத்துகின்றன.''

இந்தத் தகவல்கள் காட்டுவதென்ன? முன்னாள் சோசலிச நாடுகளின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு, ஏகாதிபத்தியங்கள் வாக்களித்தபடி சுதந்திரமான ஜனநாயக அரசு-சமூக அமைப்பை ஏற்படுத்தவில்லை; குற்றக் கும்பல்களின் ஆதிக்க அதிகாரமே அந்நாடுகளில் கோலோச்சுகின்றன என்பதுதான்!

ஜெர்மனியின் பெர்லினில் இருந்து போலந்தின் பிரேக் வரை செல்லும் நெடுஞ்சாலை ஈ-55 இன் 12 கி.மீ. நெடுகிலும் ஒவ்வொரு சனிக்கிழமை இரவி

www.padippakam.com

லும் 300 விபச்சாரிகள் வரிசையாகத் தமது வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருக்கின்றனர். அவர்கள் பேசும் மொழிகளோ செக், ருமேனியன், பல்கேரியன், ஹங்கேரியன், ஜெர்மன். வாகன ஓட்டிகளும் குடியேற்றத் தொழிலாளர்களுமே இவர்களது மலிவான வாடிக்கையாளர்கள் என்கிறது டைம் ஏடு. "ஒரு காலத்தில் கறாரான கட்டுப்பாடுகள் நிறைந்த கம்யூனிசக் கிழக்கு ஐரோப்பா இன்று தெருப் பொறுக்கிகள், விபச்சாரிகளின் பன்றித் தொழுவங்களாகிவிட்டன" "வறுமை அந்நாடுகளின் இளம்பெண்களை மேற்குலகின் சதைக் கிடங்கில் தள்ளிவிட்டது" என்கிறது அவ்வேடு. மேற்கு ஐரோப்பாவின் விபச்சாரிகளில் கால் பங்கினர் இப்போது முன்னாள் சோசலிச நாடுகளைச் சேர்ந்தவர்களாம்.

"இரும்புத் திரை தகர்ந்தபோது, ஐந்தே ஆண்டுகளில் அரிதாகக் கிடைக்கும் நல்வாழ்வைத் தேடி வறுமையில் சிக்கிய கிழக்கு ஐரோப்பியப் பெண்கள் களின் அலை அலையான வருகையால் மூன்றாண்டுகளில் 150 ஆக உயர்ந்து விட்டன. சீன நகரங்களிலும், ருசியப் பெண்கள் ஏராளமாக விபச்சாரிகளாகக் குடியேறியுள்ளனர். இத்தாலி, துருக்கியிலும் போலீசு சோதனையில் பல ருசிய, உக்ரைனிய விபச்சாரிகள் சிக்கியுள்ளனர். நடனக் குழுவினர் என்கிற பெயரில் கடத்தப்பட்டு இரவு நாட்டிய, விபச்சார விடுதிகளுக்கு இவர்கள் விற்கப்பட்டனர். மேலை நாட்டுப் பணக்காரனுடன் "திருமணம்", கைநிறைய சம்பாதிக்கும் ஒழுக்கமான வேலை, நல்ல கல்வி வாய்ப்பு என்று ஆசை காட்டி முன்னாள் சோசலிச நாடுகளில் இருந்து பெண்கள் கடத்தப்படுகின்றனர்.

"பெரும்பாலும் எல்லாப் பெண்களுமே கேடாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். முன்னாள் சோவியத் குடியரசான ஜார்ஜியக் குற்றக் கும்பல்தான் மிகவும் கொடூரமானது. கற்பழித்தும் துப்பாக்கி முனையில் மிரட்டியும் அடித்துத் துவைத்



ரஷ்ய மாஃபியா கிரிமினல் கும்பல்

அலை அலையாக மேற்கு நோக்கி ஓடி வருவார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை" என்கிறது அந்த ஏடு. ஜெர்மனியில் உள்ள 2,00,000 விபச்சாரிகளில் 40,000 பேர் கிழக்கில் இருந்து வந்தவர்கள். 14 நாள் "விசா" பெற்றுக் கொண்டு வாரந்தோறும் விமானம் நிறைய துபாய் வந்திறங்கும் ருசியப் பெண்கள் விபச்சாரத் தொழில் செய்து விட்டு வண்ண வானொளி போன்ற நுகர்பொருட்களோடு நாடு திரும்புகின்றனர். பாலுறவுக் காட்சிகள் நடத்தும் மேற்கத்திய நகர இரவு விடுதிகளில் முன்பு ஒரு சதவீதமே கிழக்கு ஐரோப்பியப் பெண்கள் இருந்தனர். மூன்றாண்டுகளில் அவர்களே 50 சதவீதத்தினராகப் பெருகினர்.

இஸ்ரேலின் டெல் அலிவ் நகரில் 50 ஆக இருந்த விபச்சார விடுதிகள் ருசியர்

தும் பெண்களை விபச்சாரத்திற்குக் கட்டாயப்படுத்தித் தள்ளுகிறது" என்கிறார்; 40 கிழக்கு ஐரோப்பியப் பெண்களை மீட்ட சமூக சேவகர் பீட்டர் சொரேன் சோன். அதற்கு இணையான கொடூரமானவை பெர்லினிலும், பிரேக்கிலும் உள்ள செசேன் பையன்கள், வட காகசியன்கள் எனப்படும் குற்றக் கும்பல்கள்; ஆயுதங்கள், கள்ளப்பணம், போதை மருந்து, பெண்கள் வியாபாரத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். பிரஸ்ஸெல்சில் உள்ள "லீ நிட்" என்ற சமூக சேவைத் தலைவர் ஃபிரென்சைன் மீர்ட் கூறுகிறார்; "பல பெண்களுக்கும் பல்லுடைந்து போயிருக்கிறது. மாடிப்படிகளில் விழுந்து விட்டதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்களில் பலரும் மிக மோசமான படிக்கட்டுகளில் தமது தொழில்களைச் செய்கிறார்கள் அல்லது முகத்தில் குத்தப்படுகிறார்கள்." ஜெர்மனியின் பாட்சென் நகர விபச்சார விடுதி ஒன்றில் பெண்கள் மட்டைகளால் அடித்து, மின்சார அதிர்ச்சியும் தரப்பட்டு விபச்சாரத்திற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். அதற்காக பிரேக்கில் பெண்கள் சவரக் கத்திகளால் வெட்டப்பட்டனர் என்று தெரியவந்திருக்கிறது. "ஒரு கிலோ ரொட்டியை விற்பதுபோல ருமேனியாவில் பெண்களை விற்கின்றனர்" என்கிறான் ஒரு விபச்சாரத் தரகன். இது பெல்ஜிய வானொளியிலேயே ஒளிபரப்பப்பட்டது.

இப்போது மேற்குலகை ஆட்டிப் படைக்கும் உல்லாச வாழ்க்கை எனப்படும் நச்சுக் கலாச்சாரம் முன்னாளைய சோசலிச நாடுகளிலும் வேகமாகப் பரவி வருகிறது. போதை மருந்து, ஓரினச் சேர்க்கை, காம வெறியாட்டம் போடும் கும்பல் பாலுறவு இவற்றின் விளைவாக "எயிட்ஸ்" போன்ற சாவு நோய்கள் காய்ச்சி ஊற்றிய ஈயத்தைப் போல இச் சமுதாயங்களையும் பற்றிக் கொண்டு விட்டது. உலகின் வேறு எந்த வகையான நாடுகளிலும் இந்த மாதிரியான கழிசடைப் பண்பாடு தொற்று நோயாய் சமூகத்தைக் கவ்வி விடுவது வியப்புக்குரியதல்ல. ஆனால் உலக அறிஞர்கள் பலரும் போற்றக் கூடிய அளவு பெண் சமத்துவம், சபோத்னிக்குகள் - கம்சமோல்கள் போன்ற சமூக உழைப்பு ஆகிய உன்னத இலட்சியங்களை எட்டிய சமுதாயங்களில் இத்தகைய இழி நிலையா? பாசிசப் படைகளை வென்று புரட்சிப்போர்களை நடத்தி, விவசாயத் தொழில்கள், அறிவியல் - தொழில் நுட்பத்தில் விண்ணை முட்டும் சாதனைகள் பலபுரிந்த நாடுகளில் இத்தகைய இழி நிலையா?

கம்யூனிசம் - சோசலிசம் என்பது இட்லரின் நாசிசம், முசோலினியின் பாசிசம் போன்று கொடியது என்று அவதூறு செய்து, சதிகள் பலபுரிந்து, இறுதியில் அந்த சமுதாயத்தை வீழ்த்தியதற்காக எக்காளமிடும் ஏகாதிபத்தியவாதிகள் இறுதியில் சாதித்ததென்ன? கம்யூனிசத்தின் பிடியிலிருந்து அந்நாடுகளை விடுவித்து சுதந்திரமான, ஜனநாயக சமுதாயமாக மாற்றப் போவதே தமது இலட்சியம் என்றார்கள். இறுதியில் கண்டது அரசியல் அதிகாரம், விவசாயம் - தொழில் - வியாபாரம், பண்பாடு - நாகரிகம் ஆகிய சமுதாயத்தின் அனைத்து வாழ்விலும் கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கத்தைத்தானே! நற்பண்புகள் மிக்க கம்யூனிசம் வீழ்ந்தது! முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் வென்றன! ஆம்! கிரிமினல் குற்றக் கும்பல்கள் என்பதே முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் மிகக் கொடிய கழிசடைப் பிரிவு தானே!

• ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## மயானமானது ஈராக்

ஈராக் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையுத்தர வின் காரணமாக, கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும், அந்நாட்டின் ஐந்து வயதிற்குக் கீழான 5,67,000 குழந்தைகள் சத்தான உணவு, மருத்துவ வசதியின்மை காரணமாக இறந்து போயுள்ளனர். இக் கொலை பாதகச் செயலை மறைத்துவிட்டு, மேற்குலக நாடுகள் ஈராக் வசம் இன்னும் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகப் பழி போட்டு தடையுத்தரவைத் தொடர்ந்து அமுல்படுத்தி வருகின்றன.

## அரசாங்கம் யாருக்காக?

பாபுவா நியூ கினியா எனும் நாட்டில் ஆஸ்திரேலியாவின் பன்னாட்டு நிறுவனமான "பி.ஹெச்.பி" தங்கம் மற்றும் தாமிரம் வெட்டியெடுக்கும் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வருகிறது. இந்நி றுவனத்தின் மீது அந்நாட்டின் சுற்றுச் சூழலைப் பாழ்படுத்தியுள்ள தாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, 14,000 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டது. அந்நாட்டு அரசு, இப்பன் னாட்டு நிறுவனத்துடன் கைகோர்த்துக் கொண்டு இவ்வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. மேலும் "யாரேனும் இனி நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்தால், அவர் 35 லட்ச ரூபாய் அபராதம் கட்ட வேண்டும்" எனும் சட்டமொன்றையும் இயற்றியுள்ளது.

## கள்வனே கண்காணிப்பாளனாக!

அரசியல்வாதிகளுக்கும் கிரிமினல்களுக்கும் உள்ள தொடர்பை அம்பலப்படுத்திய வோரா கமிட்டியின் பரிந்துரை யின்படி ஒருங்கிணைந்த ஆய்வுக்குழு ஒன்றை அமைத்துள்ளது மைய அரசு. இக்குழுவின் தலைவராக இருப்பவர் மத்திய உள்து றைச் செயலர் பத்மனாபய்யா. ஹவாலா மோசடி வழக்கில் இவ ருக்கும் தொடர்பு உள்ளதாகவும், அமீர் சகோதரர்களிடமிருந்து 45 லட்ச ரூபாய் பெற்றிருப்பதாகவும் இவர் மீது குற்றஞ் சாட்டப் பட்டுள்ளது. "இப்படிப்பட்ட நபர் எப்படி ஆய்வுக்குழுவின் தலை வராக இருக்க முடியும்?" என்ற நியாயமான கேள்வியை உச்ச நீதிமன்றத்தில் எழுப்பியுள்ளார், புகழ்பெற்ற வழக்கறிஞரான சாந்தி பூஷன்.

## கபட வேடம் கலைகிறது

என்ரானுடன் பேச்சுவார்த்தை என்ற பெயரில் நாடகமாடி வரும் பா.ஜ.க - சிவசேனா கூட்டணி அரசு, சமீபத்தில் இம்மின் திட்டத்திற்குப் பயன்படும் எரிபொரு ளான நாப்தாவினை உற்பத்தி செய் யத் தனியார் நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மின் நிலையம் அமையவுள்ள தபோல் பகுதியில் இருந்து 15 கி.மீ. தொலைவில் ஹிந்துஸ்தான் ஓமன் பெட்ரோ கெமிக்கல் நிறுவனத் திற்கு இதற்காக 400 ஏக்கர் நிலம் கூட்டணி அரசால் ஒதுக்கப்பட்டுள் ளது.

## சட்டமா? கோழிக் கறியா?

அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான கென்டகி துரித உணவ கத்தில் தயாரித்து விற்கப்படும் கோழிக்கறியில் "எம்.எஸ்.ஜி." எனப்படும் இரசாயனப் பொருளின் அளவு அனுமதிக்கப்பட்ட ஒரு சதவீதத்துக்கும் மேலாக இருப்ப தால், இந்நிறுவனம் தடையின்றி இயங்குவதில் சிக்கல்கள் தோன்றி வருகின்றன. இதன் காரணமாகவே "பெப்சி டயட்" மற்றும் "பெப்சி கோகோ" என்ற இரு குளிர் பானங்களும் நாட்டி னுள் நுழைய முடியவில்லை; மேலும் அமெரிக்காவின் மெக்டோ னால்டும் துரித உணவகங்களைத் திறக்கத் தயங்குகிறது. இதனால் மைய அரசு உணவு தரக் கட்டுப்பாடு விதிமுறைகளில், "எம். எஸ்.ஜி.யின் அளவு ஒரு சதவீதத்துக்கும் கூடுதலாக இருக்கலாம்" எனும் மாற்றத்தைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது.

## மந்திரியின் திருட்டுத்தனம்

மத்திய ஜவுளித் துறை மந்திரி கமல்நாத் சமீபத்தில் வெளி நாடு சென்று திரும்பிய பொழுது மதுபானம், நறுமணத் திரவியம், பூச்சாடிகள் என 90,000 ரூபாய் சுங்கத் தீர்வை விதிக்கக் கூடிய அளவு ஆடம்பரப் பொருட்களை அள்ளிக் கொண்டு வந்தார். வரி கட்டாமல் தப்பிப்பதற்காக அமைச்சர் மறைத்து வைத்து கொண்டு வந்த இப்பொருட்களை தில்லி விமான நிலைய சுங்க அதிகாரிகள் எக்ஸ்-ரே பரிசோதனையின் மூலம் கண்டுபிடித்தனர். தன்னை சுங்கத் தீர்வையோடு தண்டத்தொகையும் கட்ட வைத்த பெண் அதிகாரி சகுந்தலாவை ஐதராபாத்துக்குத் தூக்கியடித்து பழி தீர்த் துக் கொண்டு விட்டார், கமல்நாத்.

## காவிக் கொடி ஏந்துகிறது சமதா கட்சி

சமதா கட்சியின் உயர்மட்டத் தலைவரான நித்திஷ் குமார் சமீபத்தில் பம்பாயில் நடந்த பா.ஜ.க. கட்சியின் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதைக் கண்டித்து நித்திஷ் குமாரைக் கட்சியில் இருந்து தற்காலிக நீக்கம் செய்தார் சமதா கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சந்திரஜித் யாதவ். ஆனாலும் நித்திஷ் குமாரை ஆதரித்து, அக்கட்சியின் தலைவரான ஜார்ஜ் பெர்னாண்டசின் ஆசியோடு சந்திரஜித் யாதவைக் கட்சி யில் இருந்து நீக்கிவிட்டார், அக்கட்சியின் பொதுச் செயலர் சிவா னந்த் திவாரி. இது மட்டுமின்றி எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்துவெறி பாசிஸ்டுகளுடன் கூட்டுச் சேரவும் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். 'சோசலிசவாதி' பெர்ணாண்டசு.

## ஈழத் தமிழர்க்கு உதவத் தடை

ஈழத்தின் மீது சந்திரிகா அரசு பொருளாதாரத் தடையுத்த ரவை விதித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் காரணமாக ஈழ மக் களுக்கும் போராளிகளுக்கும் உணவு மற்றும் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களும் கிடைப் பதில்லை. தமிழின உணர்வு கொண்ட மீனவர்கள் சிலர் இந்த எரி பொருட்களையும், பலவகை மருந் துப் பொருட்களையும் கடல் வழியே எடுத்துச் சென்று உதவி வருகின்ற னர். சந்திரிகா அரசுக்கு மறைமுக மாக உதவும் நோக்கத்தோடு, இந்தப் பொருட்களை ஈழத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்காக இராமநா தபுரம் கடல் பகுதியில் மிதவை சோத னைச் சாவடியை அமைக்கவுள்ளது, இந்தியக் கடற்படை.

மரணப் படுக்கையில் ஈராக்கிய குழந்தை



Published and owned by R. SHANMUGARAJ. 25, Arunachalam St, Jothiramalingam Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor: R. SHANMUGARAJ

PUTHIYA JANANAYAGAM R.N. 42046/85 Regd. No TN/MS(S) 622
www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இந்தப் படத்திலுள்ள இளைஞன் தனது தோளில் சுமந்து செல்வது என்ன தெரியுமா? பீரங்கிக் குண்டு வெடித்த பின் எஞ்சி நிற்கும் உலோக ஓடுதான் அது. இதை விற்றுக் கிடைக்கும் வருமானத்தைத்தான் இவனது குடும்பம் நம்பி வாழ்கிறது. இந்த இளைஞனின் குடும்பம் மட்டும்தான் என்றில்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் நாசிக் நகரத்தை ஒட்டியிருக்கும் 17 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு பீரங்கிக் குண்டுகளின் உலோக ஓடுகளைப் பொறுக்கி விற்பதுதான் 'தொழில்'! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய இராணுவம் தனது சுடுதிறன் சோதிக்கும் களத்திற்காக இக்கிராம மக்களது வயல்வெளிகளைக் கைப்பற்றிக் கொண்ட நாளில் இருந்தே, விவசாயிகள் கலப்பைகளுக்குப் பதிலாகத் தங்கள் தோள்களில் இந்த உலோக ஓடுகளைச் சுமக்கத் தொடங்கி விட்டனர். "காணம் தப்பினால் மரணம்" என்பார்களே அப்படியான அபாயம் நிறைந்தது, இந்த வேட்டை... அடுத்தடுத்து தீப்பொறி பறக்கச் சீறிப் பாய்ந்து மழை போல் பூமியில் விழுந்து வெடிக்கும் குண்டுகளால் ஒவ்வொரு வருடமும் 100 பேர் இறந்து போகிறார்கள்; பலர் கை, கால்களை இழந்து முடமாகிறார்கள். துணிந்தவனுக்குத்தான் வருமானம்; அஞ்சி ஒதுங்கினாலோ அன்று வீட்டின் அடுப்பில் பூனைதான் உறங்கும்.

இதோ விதவிதமாக இரகத்திற்கு ஒன்றாக அணிவகுத்து நிற்கும் இந்தக் கார்களைக் காணும் பொழுது, "கார் கண்காட்சியில் எடுத்த புகைப்படமோ?" என எண்ணத் தோன்றலாம்; ஆனால் உண்மை அதுவல்ல. காங்கிரசு பெருச்சாளிகளுடன் கைகோர்த்துக் கொண்டு, பங்குப் பத்திர மோசடியில் கோடி கோடியாய்க் கொள்ளையடித்தானே அர்சத் மேத்தா - அவனுக்குச் சொந்தமாக இருந்தவை இந்தக் கார்கள். "அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான்" என்பார்களே அந்தப் பழமொழிதான் இதனைக் கேள்விப்படும்பொழுது நினைவுக்கு வருகிறது. அணியும் ஆடையின் வண்ணத்துக்கு ஏற்ப கார்களைத் தேர்ந்தெடுத்து பம்பாய் நகரைப் பவனி வந்திருப்பான் போலும் இம்மோசடிப் பேர்வழி. கார்களே இத்துணை என்றால் இவனது அந்தரங்க வாழ்வு எத்தகைய ஆடம்பரமும் வக்கிரமும் நிறைந்திருக்கும்?

'சுதந்திர' இந்தியாவின் இராணுவ பலத்திற்காகத் தங்கள் உடைமைகளை இழந்து, அரை வயிற்றுக் கஞ்சிக்காகத் தினம் தினம் மரணத்துடன் போராடும் வறிய விவசாயிகள் ஒரு புறம். தாராளமய சலுகைகளைப் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தையே அரித்துத் தின்று மகாராஜாக்களைப் போல வலம் வரும் அர்சத் மேத்தாக்கள் மறுபுறம். இந்த ஒட்டுண்ணிக் கும்பல் நமது வாழ்வைச் சூறையாட இன்னுமா அனுமதிக்கப் போகிறோம்?




படிப்பகம்